# போர்ட் ஸெய்ன்ட் ஜார்ஜ் கெஜெட்

## I-A பாகத்தின் ஸப்ளிமென்ட்.

**SUPPLEMENT TO PART I-A OF THE FORT ST. GEORGE GAZETTE,**

MARCH 7, 1922.

நெ. 10உ] மதராஸ்: செவ்வாய்க்கிழமை மாலை, 1922-ம் ௵ மார்ச் ௴ 7௳. [விலை, 3 அ. 6 பை.


## கவர்ன்மென்ட் விளம்பரங்களின் தமிழ்மொழிபெயர்ப்பு

## Tamil Translations of Notifications by Government.

### லோகல் ஸெல்ப் கவர்ன்மென்ட் டிபார்ட்மென்ட்.

### விளம்பரங்கள்.

போர்ட் ஸெய்ன்ட் ஜார்ஜ், 1921-ம் ௵ ஆகஸ்ட் ௴ 23௳.

கூ. 876.—1919-ம் ௵த்திய சென்னை ராஜதானிப்பட்டணத்து மியுனிஸிபல் ஆக்ட் 349-வது பிரிவைச் சேர்ந்த (9) குறிப்பிட்ட பகுதியின்படி சென்னையிலுள்ள (பார்க்குகள்) நந்தவனங்கள், தோட்டங்கள் அல்லது சதுக்கங்களை உபயோகிப்பதைக்குறித்து ஒழுங்கேற்படுத்துவதற்காக சென்னை நகர் விசாரணைச்சங்கத்தாரால் செய்யப்பட்டு, 352-வது பிரிவின்படி கவர்ன்மென்டாரால் ஜாரிசெய்யப்பட்ட அடியிற்கண்ட சகாயச்சட்டங்கள் யாவர்க்கும் தெரியும்படி பிரசுரிக்கப்படுகின்றன:—

**சென்னையில் நகர் விசாரணைச்சங்கத்தார் வசத்திலிருக்கும் நந்தவனங்கள், தோட்டங்கள் அல்லது சதுக்கங்களை உபயோகிப்பதைக்குறித்து ஒழுங்கேற்படுத்துவதற்காக 349-வது பிரிவைச் சேர்ந்த (9) குறிப்பிட்ட பகுதியின்படி செய்யப்பட்ட சகாயச்சட்டங்கள்.**

நந்தவனங்கள், தோட்டங்கள் அல்லது சதுக்கங்கள் இன்ன மணி நேரங்களில் திறந்துவைக்கப்படவேண்டுமென்பது.

1. நகர் விசாரணைச்சங்கத்தார் வசத்திலிருக்கும் ஒவ்வொரு நந்தவனம், தோட்டம் அல்லது சதுக்கமும் கம்மிஷனரால் அறிக்கை செய்யப்படக்கூடிய மணி நேரங்களுக்கிடையில் பொது ஜனங்கள் போகும்படித் திறந்துவைக்கப்படவேண்டும். ஷெ மணி நேரங்கள் இன்னவையென்று ஒரு பலகையில் எழுதி அந்தப் பலகை ஷெ நந்தவனம், தோட்டம் அல்லது சதுக்கத்தின் பிரவேச வாயிலில் நன்றாய்த் தெரியும்படியான சில பாகங்களில் வைக்கப்படும்.

பொதுஜன வேடிக்கை சடங்கு அல்லது பொருட்காட்சி.

2. கம்மிஷனரிடத்திலிருந்து அனுமதி கிடைத்த பிறகாவது அவரால் அனுமதி கொடுக்கப்பட்டபிறகாவது அப்படிப்பட்ட நந்தவனம், தோட்டம் அல்லது சதுக்கத்தில் பொதுஜனங்களுக்காக யாதொரு வேடிக்கையாகிலும் சடங்காகிலும் பொருட்காட்சியாகிலும் நடந்துகொண்டிருக்கும்போது, அந்த நந்தவனம், தோட்டம் அல்லது சதுக்கமானது - கம்மிஷனருக்கு யுக்தமாகத் தோற்றக்கூடிய கால அளவுக்கும் ஷரத்துகளின்படியும் திட்டங்களின்படியும் திறந்தோ அல்லது மூடியோ வைக்கப்படும்; மேலும், 1-வது சகாயச்சட்டத்தில் சொல்லியிருக்கிற மாதிரியாகவாவது ஒரு சமாசார பத்திரிகையிலாகிலும் பல சமாசார பத்திரிகைகளிலாகிலும் விளம்பரம் பிரசுரிப்பதன் மூலமாகவாவது ஷை காலஅளவு முதலியவைகளைப்பற்றி அறிக்கை செய்யப்படும்.

பிரவேசிப்பது அல்லது வெளியே போவது.

3. எந்த நபரும் - இது காரியத்துக்காக ஏற்படுத்தப்பட்டிருக்கும் கேட் (வாயில்) அல்லது வழியாகவன்றி மற்றப்படி அப்படிப்பட்ட நந்தவனம், தோட்டம் அல்லது சதுக்கத்துக்குள் பிரவேசிக்கவாவது அதை விட்டு வெளியே போகவாவது கூடாது.

நோடிஸ் ஒட்டும் பலகைகளை விகாரப்படுத்தவாவது எடுத்துவிடவாவது கூடாதென்று தடுப்பது.

4. நகர் விசாரணைச்சங்கத்தாரின் யாதொரு நோடிஸ் அல்லது சகாயச் சட்டத்தைக் காட்டிவைப்பதற்காக ஷை நந்தவனம், தோட்டம் அல்லது சதுக்கத்தில் வைத்திருக்கும் யாதொரு பலகையையாவது சிறுபலகை முதலியவைகளையாவது எந்த நபரும் விகாரப்படுத்தவாகிலும் எடுத்துவிடவாகிலும் கூடாது.

பிராணிகளைக் கொண்டு வரக்கூடாதென்று தடுப்பது.

5. எந்த நபரும் - அப்படிப்பட்ட நந்தவனம், தோட்டம் அல்லது சதுக்கத்துக்குள் எப்படிப்பட்ட பிராணியையாகிலும் கொண்டுவரவுங்கூடாது, தமக்குச் சொந்தமாக்வாகிலும் தமமுடைய வசத்திலாகிலும் இருக்கிற யாதொரு பிராணியை அதற்குள் இருக்கவொட்டவுங் கூடாது.

பிரசித்த பத்திரிகைகளை ஒட்டுவது.

6. எந்த நபரும் - கம்மிஷனரின் எழுத்துமூலமான அனுமதியுடனன்றி மற்றப்படி, அப்படிப்பட்ட நந்தவனம், தோட்டம் அல்லது சதுக்கத்தின் யாதொரு பாகத்திலாவது அதிலுள்ள யாதொரு மரத்தின் மேலாவது யாதொரு பிரசித்த பத்திரிகை, விளம்பரம் அல்லது நோடிஸை மாட்டிவைக்கவாகிலும் ஒட்டவாகிலும் கூடாது.

மண்முதலியவைகளை அப்புறப்படுத்தவாவது கலைக்கவாவது கூடாதென்று தடுப்பது.

7. எந்த நபரும் - நகர் விசாரணைச்சங்கத்தைச்சேர்ந்த ஊழியக்காரர் என்னும் ஹோதாவில் தம்முடைய உத்தியோக அலுவலைச் செயயும்போதன்றி மற்றப்படி, அப்படிப்பட்ட நந்தவனம், தோட்டம் அல்லது சதுக்கத்திலுள்ள எந்த மண்ணையாகிலும் புல் தரையையாகிலும் பூப்பாத்தியையாகிலும் அப்புறப்படுத்தவுங்கூடாது கலைக்கவுங்கூடாது; அந்த நந்தவனம் முதலியவைகளிலுள்ள யாதொரு புஷ்பம அல்லது இலையைக கிள்ளவுங்கூடாது.

சொத்துக்குச் சேதம் உண்டாக்குவது அல்லது குப்பைகூளத்தைக் கொட்டுவது.

8. எந்த நபரும் - அப்படிப்பட்ட நந்தவனம், தோட்டம் அல்லது சதுக்கத்திலாவது அதைச் சுற்றிலுமாவதுள்ள யாதொரு சுவர், வேலி, தடை அல்லது கிராதிச்சட்டத்தின் யாதொரு பாகத்தையாகிலும், ஷை நந்தவனம், தோட்டம அல்லது சதுக்கத்திலுள்ள நிலையாய் பொருத்தியோ அல்லது அசைக்கக்கூடியதாகவோ இருக்கும் யாதொரு ஆசனம், கட்டிடம், ஞாபகச்சின்னம், சித்திரவேலை, அலங்கரிப்பதற்காகவாவது சிங்காரிப்பதற்காகவாவது செய்யப்பட்ட வேலை, அல்லது யாதொரு கட்டுக்கோப்பு அல்லது அமைப்பு, அல்லது யாதொரு மியுனிஸிபல் சொத்தின் யாதொரு பாகத்தையாகிலும் அழிக்கவோ சேதப்படுத்தவோ விகாரப்படுத்தவோ அழுக்காக்கவோ அசுத்தப்படுத்தவோ கூடாது; மேலும், அப்படிப்பட்ட நந்தவனம், தோட்டம் அல்லது சதுக்கத்தின் யாதொரு பாகத்தின்மேல் எவ்வித அசுத்தங்கள, குப்பைகூளம் அல்லது கழிகடைவஸ்துக்களைக் கொட்டவாயினும் போட்டுவைக்கவாயினும், எவ்வித அசுத்தங்கள், குப்பைகூளம் அல்லது கழிகடை வஸ்துக்கள் விழும்படிச் செய்யவாயினும் கொட்டும்படிச்செய்யவாயினும் போட்டுவைக்கும்படிச் செய்யவாயினும் கூடாது.

கல் முதலியவைகளை எறிவது.

9. அப்படிப்பட்ட நந்தவனம், தோட்டம் அல்லது சதுக்கத்துக்குள் யாதொரு கல்லையாவது எறியத்தக்க வேறே யாதொரு ஆயுதத்தையாவது எவரும் எறியவுங்கூடாது விடவுங்கூடாது.

மரம், சுவர் முதலியவைகளின்மேல் ஏறக்கூடாதென்று தடுப்பது.

10. அப்படிப்பட்ட நந்தவனம், தோட்டம் அல்லது சதுக்கத்திலாவது அதைச் சுற்றிலுமாவதுள்ள யாதொரு மரம், சுவர், வேலி, தடை, கிராதி அல்லது கம்பத்தின்மேல் எவரும் ஏறக்கூடாது.

ஸ்நானஞ்செய்வது முதலியவை.

11. எந்த நபரும் - அப்படிப்பட்ட நந்தவனம், தோட்டம் அல்லது சதுக்கத்துக்குள் இருக்கும் யாதொரு குளம், குட்டை அல்லது வேறே அலங்காரமான யாதொரு நீர் நிலையில் ஸ்நானஞ்செய்யவுங்கூடாது, அப்படிப்பட்ட யாதொரு நீர்நிலையில் துணிகளைத் தோய்க்கவுங்கூடாது, யாதொரு வஸ்துவைக் கழுவவுங்கூடாது, அந்த நீர்நிலையை அழுக்குப்படுத்தவுங்கூடாது அசுத்தப்படுத்தவுங்கூடாது ; மேலும், கம்மிஷனரின் உத்தரவு பெற்றுக்கொள்ளாமல் எவரும் அப்படிப்பட்ட யாதொரு நீர்நிலையில் மீன்பிடிக்கவுங்கூடாது.

விளையாட்டுகள்.

12. அப்போதைக்கப்போது கம்மிஷனரால் நிர்ணயிக்கப்பட்டு 1-வது சகாயச் சட்டத்தில் சொல்லியிருக்கிற மாதிரியாகவே அறிக்கை செய்யப்படக்கூடிய திட்டங்களின்படிக்கன்றி மற்றப்படி அப்படிப்பட்ட நந்தவனம், தோட்டம் அல்லது சதுக்கத்துக்குள் எந்த விளையாட்டும் விளையாடக்கூடாது.

குடிப்பது.

13. எவரும் அப்படிப்பட்ட நந்தவனம், தோட்டம் அல்லது சதுக்கத்துக்குள் மயக்கம் தரும் யாதொரு சாராயத்தைக் குடிக்கவுங்கூடாது குடிப்பதற்காகக் கொண்டுவரவுங்கூடாது.

அமைப்புகள்.

14. கம்மிஷனரின் எழுத்துமூலமான அனுமதியுடனன்றி மற்றப்படி, எந்த நபரும் - அப்படிப்பட்ட நந்தவனம், தோட்டம் அல்லது சதுக்கத்துக்குள் யாதொரு தூண், கிராதிச்சட்டம், வேலி, கம்பம், கூடாரம், (பூத்) கொட்டகை, நிலை, கட்டிடம் அல்லது வேறே கட்டுக்கோப்பை அமைக்கக்கூடாது.

தும்பு தட்டுவது.

15. எந்த நபரும் - தும்பு அல்லது தூசி படிந்திருக்கும் யாதொரு ஜமுக்காளத்தையாவது, கம்பளியிரட்டையாவது, கம்பளியையாவது, பாயையாவது, வேறே யாதொரு துணியையாவது அப்படிப்பட்ட நந்தவனம், தோட்டம் அல்லது சதுக்கத்தில் தட்டவுங்கூடாது சுத்தஞ்செய்யவுங்கூடாது.

வஸ்துக்களை விற்பனை செய்வது.

16. கம்மிஷனரின் எழுத்துமூலமான அனுமதியுடனன்றி மற்றப்படி, எந்த நபரும் - அப்படிப்பட்ட நந்தவனம், தோட்டம் அல்லது சதுக்கத்தில் யாதொரு சரக்கு அல்லது வஸ்துவை விற்கவுங்கூடாது, விற்பனை செய்வதாகச் சொல்லவுங்கூடாது, விற்பனைக்குக் காட்டிவைக்கவுங்கூடாது, வாடகைக்குக் கொடுக்கவுங்கூடாது, வாடகைக்குக் கொடுப்பதாகச் சொல்லவுங் கூடாது, வாடகைக்குக் கொடுப்பதற்காகக் காட்டிவைக்கவுங்கூடாது.

சணலால் செய்த துணிகளை உலர்த்துவது அல்லது சலவைசெய்வது.

17. சணலால் செய்த யாதொரு துணியையாவது வேறே யாதொரு துணியையாவது உலர்த்தும் அல்லது சலவை செய்யும் காரியத்துக்காக அப்படிப்பட்ட நந்தவனம், தோட்டம் அல்லது சதுக்கத்தில் எவரும் விரித்துப்போடவுங்கூடாது போட்டுவைக்கவுங்கூடாது.

அலுவலின்மேலிருக்கும் ஊழியக்காரர்களைத் தடுப்பது அல்லது தொந்தரவு செய்வது.

18. யாதொரு நபர் - அப்படிப்பட்ட நந்தவனம், தோட்டம் அல்லது சதுக்கத்தை வேறே யாதொரு நபர் கிரமமாய் உபயோகித்துக்கொண்டோ அநுபவித்துக்கொண்டோ இருக்கையில் அவரை வேண்டுமென்று தடுக்கவுங்கூடாது, தொந்தரவு செய்யவுங்கூடாது, தடைபண்ணவுங்கூடாது, உபத்திரவப்படுத்தவுங்கூடாது ; மேலும், நகர் விசாரணைச்சங்கத்தாரின் யாதொரு உத்தியோகஸ்தராகிலும் ஊழியக்காரராகிலும் நகர் விசாரணைச்சங்கத்தாரால் வேலையில் அமர்த்திக்கொள்ளப்பட்ட யாதொரு நபராகிலும் அப்படிப்பட்ட யாதொரு நபரின் ஊழியக்காரராகிலும் தம்முடைய அலுவலைச் செய்துகொண்டிருக்கையில் அவரை வேண்டுமென்று எவரும் தடுக்கவுங்கூடாது தொந்தரவுசெய்யவுங்கூடாது தடைபண்ணவுங்கூடாது.

அசங்கியம் அல்லது சங்கடம்.

19. எவரும் அப்படிப்பட்ட நந்தவனம், தோட்டம் அல்லது சதுக்கத்தில் அசங்கியம் அல்லது சங்கடம் உண்டாகத்தக்க காரியத்தைச் செய்யக்கூடாது.

பொது ஜனங்களைத் தொந்தரவுசெய்வது அல்லது அவர்களுக்கு உபத்திரவம் உண்டுபண்ணுவது.

20. எவரும்-அப்படிப்பட்ட நந்தவனம், தோட்டம் அல்லது சதுக்கத்தில் பொதுஜனங்களைத் தொந்தரவு செய்யவுங்கூடாது அவர்களுக்கு உபத்திரவம் உண்டுபண்ணவுங்கூடாது ; மேலும், வசைச் சொற்களையாகிலும், அசப்பியமான சொற்களையாகிலும் நிந்தையான சொற்களைகளையாகிலும் உபயோகிக்கவுங்கூடாது.

அருவருப்பான அல்லது தொத்திக்கொள்ளத்தக்க வியாதிகளினால் வருந்திக் கொண்டிருக்கும நபர்கள் வரக்கூடாதென்று தடுப்பது.

21. அருவருப்பான அல்லது தொத்திக்கொள்ளத்தக்க யாதொரு வியாதியினால் வருந்திக்கொண்டிருக்கும் எந்த நபரும் அப்படிப்பட்ட நந்தவனம், தோட்டம் அல்லது சதுக்கத்துக்குள் பிரவேசிககக்கூடாது.

மிருகக்காட்சி சாலையிலுள்ள பிராணிகளுக்குக் கோபமூட்டவாவது அவைகளை உபத்திரவப்படுத்தவாவது கூடாதென்று தடுப்பது.

22. பீபில்ஸ் பார்க்கிலுள்ள மிருகக்காட்சி சாலைக்கு வரும் எந்த நபரும் எவ்விதமாகவாகிலும் அங்குள்ள பிராணிகளுக்குக் கோபமூட்டவுங்கூடாது, அவைகளை உபத்திரவப்படுத்தவுங் கூடாது.

தண்டனைகள்.

23. முந்திய சகாயச்சட்டங்களில் எதையாகிலும் மீறிநடக்கும் ஒவ்வொரு நபருக்கும் (a) 50 ரூபாய் வரையில் அபராத தண்டனையும், அந்தப்படி மீறிநடந்துகொண்டேயிருந்தால முதல் தடவை மீறிநடந்ததற்காகக் குற்றவாளியென்று தீர்மானிக்கப்பட்ட பிறகு மீறிநடந்துகொண்டேயிருக்கும் ஒவ்வொரு தினத்துக்கும் 15 ரூபாய் வரையில் அபராத தண்டனையுமாவது, (b) அந்தபபடி மீறி நடப்பதை நிறுத்தவேண்டுமென்று கம்மிஷனரிடத்திலிருந்து நோடீஸ் வரப்பெற்றுக் கொண்டபிறகு மீறிநடந்துகொண்டேவரும் ஒவ்வொரு தினத்துக்கும் 10 ரூபாய் வரையில் அபராத தண்டனையாவது விதிக்கப்படும்.

---

போர்ட் ஸெய்ன்ட் ஜார்ஜ், 1921-ம் ஞு டிஸெம்பர் மீ 6 வ.

ஷ. 1130.—1919-ம் ஞு த்திய சென்னை ராஜதானிப்பட்டணத்து மியுனிஸிபல் ஆக்டின் (5), (6) குறிப்பிட்ட பகுதிகளின்படி சென்னை நகர் விசாரணைச்சங்கத்தாரால் செய்யப்பட்டு, 352-வது பிரிவின்படி கவர்ன்மென்டாரால் ஜாரிசெய்யப்பட்ட அடியிற்கண்ட சாக்கடைக்கால் சம்பந்தமான சகாயச்சட்டங்கள் யாவர்க்கும் தெரியும்படி பிரசுரிக்கப்படுகின்றன :—

## 1919-ம் ஞு த்திய சென்னை ராஜதானிப்பட்டணத்து மியுனிஸிபல் ஆக்ட் 349-வது பிரிவைச் சேர்ந்த (5), (6) குறிப்பிட்ட உட்பிரிவுகளின்படி செய்யப்பட்ட சாக்கடைக்கால சம்பந்தமான சகாயச்சட்டங்கள்.

### I.—பொது நிபந்தனைகள்.

சாமான்களின் விவரக் குறிப்பு.

1. இந்த சகாயச்சட்டங்களின் காரியத்துக்காக,—

போர்ட்லாண்ட் ஸிமென்ட் என்பது - இந்த வஸ்துவுக்கு ப்ரிடிஷ் பரிமாணப்படிக்கான விவரக்குறிப்புடன் ஒத்திருக்கவேண்டும்.

ஸிமென்ட் மார்ட்டர் (கலவை) என்பது - கன பரிமாணத்தின்படி அளக்கப்பட்டதாய் ஒரு பாகம் போர்ட்லாண்ட் ஸிமென்டும் மூன்று பாகம் சுத்தமான பெருமணலும் சரியான அளவுக்கு சுத்தமான தண்ணீரில் நன்றாய்க் கலந்ததாயிருக்கவேண்டும.

செங்கல் கட்டிடம் என்பது - நன்றாய்ச் சுடப்பட்டு கெட்டியாகவும் உடையாமலும் சரியான வடிவமுள்ளதாகவும் இருக்கும் செங்கல்களை ஸிமென்ட் மார்ட்டரில் அமைத்து சரியாக அணைத்துக் கட்டப்பட்டதாயிருக்கவேண்டும்.

ஸிமென்ட் காங்க்ரீட் என்பது - ஒரு பாகம் போர்ட்லாண்ட் ஸிமென்டும் மூன்று பாகம் சுத்தமான பெருமணலும் (பரிமாணத்தின்படி அளந்து) ஆறு பாகம் சுத்தமாயும்

கெட்டியாயுமுள்ள உடைந்த கற்களும் அல்லது சுத்தமாயும் கெட்டியாயும் உள்ள நன்றாய்ச் சுடப்பட்ட உடைந்த செங்கல்லும் சரியான அளவுக்கு சுத்தமான தண்ணீரில் நன்றாய்க் கலந்ததாயிருக்கவேண்டும்; மேற்படி உடைந்த கற்களும், உடைந்த செங்கல்லும், $1\frac{1}{2}$ அங்குலம் குறுக்களவுள்ள ஓர் வளையத்துக்குள் போகக்கூடிய பருமன் உள்ளவைகளாயிருக்க வேண்டும்.

*குறிப்பிட்டுள்ளவைகளைத் தவிர வேறே சாமான்களை உபயோகிக்கும்படி அனுமதி கொடுக்க என்ஜினீருக்குள்ள அதிகாரம்.*

2. குறிப்பிட்டுள்ளவைகளைத் தவிர வேறே சாமான்கள் தகுதியானவையென்றும் பிரயோஜனகரமானவையென்றும் என்ஜினீர் நினைத்தால், அப்படிப்பட்ட சாமான்களை யாதொரு விஷயத்தில் உபயோகிக்கும்படி எழுத்துமூலமாய் அனுமதி கொடுக்க அவருக்கு அதிகாரம் உண்டு; ஆனால், இந்த அதிகாரத்தை அவர் (வேறொருவருக்குக்) கொடுக்கக்கூடாது.

## II.—மழைத்தண்ணீரையும் சேற்றையும் விலக்கவேண்டுமென்பது.

எந்த நபரால் அல்லது எந்த நபருக்காக புதிய அல்லது ஏற்கனவே இருக்கிற கட்டிடங்களுக்காக சாக்கடைக்கால்களாவது சுகாதார சம்பந்தமான இசைப்புகளாவது இதர கட்டுவேலைகளாவது ஏற்படுத்தப்படுகின்றனவோ, கட்டப்படுகின்றனவோ, அமைக்கப்படுகின்றனவோ அல்லது மாற்றப்படுகின்றனவோ அப்படிப்பட்ட ஒவ்வொரு நபரும் கீழே கண்டிருக்கிற விதமாய் நடந்துகொள்ளவேண்டும்.

*அசுத்தமான தண்ணீர் போவதற்கும் மழைத்தண்ணீர் போவதற்கும வெவ்வேறு சாக்கடைக்கால்கள் ஏற்படுத்தவேண்டுமென்பது.*

3. அவர் - ஒவ்வொரு கட்டிடத்திலும் வளவிலும் உள்ள தண்ணீர் வடிந்துபோவதற்காக தகுந்த ஏற்பாடு செய்யவேண்டும்; மேலும், ஒவ்வொரு விஷயத்திலும் மழைத்தண்ணீருக்கும் மேற்புறத்தில் சேரும் தண்ணீருக்கும் வேறாகவும், சாக்கடைத் தண்ணீருக்கும் வேறாகவும் பிரித்து ஏற்பாடு செய்யவேண்டும்; ஆனால், அசுத்தங்கள் போவதற்கும் மழைத்தண்ணீர் போவதற்கும் ஒன்றாயுள்ள திறந்தலையான சாக்கடைக்காலகள் ஏற்கனவே ஏற்படுத்தப்பெற்றிருக்கும் வீடுகளின் விஷயத்தில் அந்தப்படி ஏற்பாடு செய்யவேண்டியதில்லை.

*மழைத்தண்ணீருக்கான சாக்கடைக்கால்கள்.*

4. அவர்-மழைத்தண்ணீருக்கான சாக்கடைக்கால்களை ஏற்படுத்தி, கூரைகளிலிருந்தும் முற்றங்களிலிருந்தும் திறந்தலையான இடங்களிலிருந்தும் வரும் சகல மழைத்தண்ணீரையும் மேற்புறத்தில் சேரும் தண்ணீரையும் அந்த சாக்கடைக்கால்களுக்குள்ளும், மியுனிஸிபாலிடியைச் சேர்ந்த யாதொரு அசுத்தஜல சாக்கடைக்காலுக்காவது யந்திரத்தினால் (சாக்கடைத்தண்ணீரை) இறைக்கும் யாதொரு இடத்துக்காவது ஷை சாக்கடைத்தண்ணீரைப் பாய்ச்சலுக்கு உபயோகிப்பது, பூமியில் ஊறிவிடும்படி செய்வது முதலியவைகளுக்கான எவையேனும் கட்டுவேலைகளுக்காவது போய்ச்சேருகிற அசுத்தஜல சாக்கடைக்கால் அல்லது வேறே யாதொரு சாக்கடைக்காலோடு சமபந்தப்பட்டுள்ள தண்ணீர் வெளியே போவதற்கான அல்லது உள்ளே வருவதற்கான யாதொரு துவாரத்திலிருந்து அப்புறமாகவும் திருப்பிவிடவேண்டும்; மேலும், அவர் - மழைத்தணணீர் எல்லாம், அதற்காக ஏற்படுத்தியுள்ள சாக்கடைக்கால்களிலேயே போகும்படி செய்வதற்கு அவசியமாயிருக்கக்கூடிய தடைச்சுவர்கள் அல்லது இதர உபகரணங்களை ஏற்படுத்தி அவைகளைப் பராமரித்துவரவும்வேண்டும்; மேற்படி சாக்கடைக்கால்களில் ஓடும் தண்ணீரானது என்ஜினீரால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு ஸ்தானத்தில் தாராளமாய்ப் போய் வெளியே விழவேண்டும்.

*மழைத்தண்ணீர்க் குழாய்களும் தண்ணீர்க்கால்களும்.*

5. அவர்-கம்மிஷனர் உத்தரவு செய்யும்பட்சத்திலே, வீடுகள் அல்லது இதர கட்டிடங்களின் கூரைகள் எல்லாவற்றிலும் மழைத்தண்ணீரைச் சேர்ப்பதற்கும் அந்தத் தண்ணீரை, அது விழுவதற்காக கட்டப்பட்டுள்ள சாக்கடைக்கால்களிலாவது திறந்தலையான கால்வாய்களிலாவது போய்விழும்படி செய்வதற்கும் அவசியமாயிருக்கக்கூடியவையாய், இரும்பு, துத்தநாகம் அல்லது வேறே தகுந்த வஸ்துவினால நன்றாய்ச செய்யப்பட்ட தண்ணீர்க்கால்களையும், இரும்பு அல்லது துத்தநாகத்தினால் செய்யப்பட்ட மழைத்தண்ணீர்க் குழாய்களையும் ஏற்படுத்தவேண்டும். ஷை மழைத்தண்ணீர்க் குழாய்களிலுள்ள தண்ணீரானது அழுக்கு ஜலதாரை ஏற்பாட்டுடன் சம்பந்தப்பட்டிருக்கும் யாதொரு சாக்கடைக்கால், ட்ராப் என்னும் சாதனம் அல்லது வேறே கட்டுவேலைக்குள் போய்விழுவதற்கு எந்த விஷயத்திலும் அவர் அனுமதி கொடுக்ககூடாது.

*சாக்கடைக்கால்களுக்குள் தண்ணீர் போய்விழும் வழிகள் வெள்ளநீர்மட்டத்துக்கு மேலே இருக்கவேண்டுமென்பது.*

6. அவர் - அழுக்கு ஜலதாரை ஏற்பாட்டுடன் சேர்க்கப்பட்டிருக்கும் அல்லது சேர்க்க உத்தேசித்திருக்கும் யாதொரு சாக்கடைக்காலுக்குள் தண்ணீர் போய்விழும் வழி ஒவ்வொன்றையும், அப்படிப்பட்டவழிஏற்படுத்தப்படும் இடத்தில் தெரிந்திருக்கும் வரையில் பெருத்த வெள்ளத்தின் மட்டத்துக்குக் குறைந்தபட்சம் ஒரு அடிக்கு மேலாவது அமைக்கும்படி செய்யவேண்டும். இந்த நோக்கம் நிறைவேறும் பொருட்டு, அவர் - அழுக்கு ஜலதாரை ஏற்பாட்டுடன் சம்பந்தப்பட்டிருக்கிற சகல

கல்லி (gully) என்னும் சாதனங்களுக்கும் இதர துவாரங்களுக்கும், மழைத் தண்ணீர் அல்லது மேற்புறத்தில் சேரும் தண்ணீரெல்லாம் அழுக்கு ஜலதாரை ஏற்பாட்டோடு சம்பந்தப்பட்டிருக்கிற யாதொரு சாக்கடைக்காலுக்குள்ளே புகுவதை நன்றாய்த் தடுக்கக்கூடிய உயரம் உள்ளதாய் கல்லினால் கட்டப்பட்ட அல்லது வேறே தகுதியான தடைச்சுவர்கள் ஏற்படுத்தவேண்டும்.

மழைத்தண்ணீருக்கான சாக்கடைக்கால்கள் ஏற்படுத்தவேண்டுமென்பது.

7. அப்படிப்பட்ட கட்டிடம் சம்பந்தமாய் அவர் - அந்த கட்டிடத்தின் கூரைமேல் விழக்கூடிய எந்த தண்ணீரையும் அதுகாரியத்துக்காக அமைக்கப்பட்டுள்ள சாக்கடைக்காலில் கொண்டுபோய்ச் சேர்ப்பதற்குப் போதுமான குழாய்களையும் கால்வாய்களையும் கல்லிகளையும் ஏற்படுத்தவேண்டும்.

யாதொரு வாட்டர் க்ளாஸெட் என்னும் தண்ணீர் வேகமாய் விழுவதனால் மலம் அடித்துக்கொண்டுபோகும் கக்கூஸ், மூத்திரம் பெய்யுமிடம், (சாதாரண) கக்கூஸ், ஸ்லாப் அல்லது இதர ஸிங்க் என்னும் குழி, ஸ்நானம் செய்யுமிடம் அல்லது முகமுதலியவைகளைக் கழுவிக்கொள்ளுமிடத்திலிருந்து கெட்டியான அல்லது திரவரூபமான வஸ்து எதுவும் வந்து விழும்படி மேற்படி குழாய்கள், கால்வாய்கள் அல்லது கல்லிகள் எதையும் அவர் கட்டுவிக்கக்கூடாது.

அப்படிப்பட்ட எந்தக் குழாய்களாகிலும் பூமியின் கீழுள்ள தண்ணீர்மட்டத்துக்கு கீழே அமைக்கப்படும் இடங்களிலெல்லாம் அவை ஸிமெண்ட் கான்க்ரீட்டின்மேல் அமைக்கப்பட்டு சுற்றிலும் அதனால் மூடப்படவேண்டும்; மேலும், இதர இடங்களில், என்ஜினீரால் அவசியமென்று நினைக்கப்படும்பட்சத்திலே, அப்படிப்பட்ட எந்த குழாய்களாயினும் அவர் கட்டளையிடக்கூடிய விதமாய் ஸிமெண்ட் கான்க்ரீட்டின்மேல் அமைக்கப்படவாவது அதனால் சுற்றிலும் மூடப்படவாவது வேண்டும்.

## III.--கட்டிடங்களுக்குக் கல்லினால் அல்லது இரும்பினால்செய்த குழாய்களைக்கொண்டு சாக்கடைக்கால்கள் அமைப்பது.

எந்த நபரால் அல்லது எந்த நபருக்காக புதிய அல்லது ஏற்கனவே இருக்கிற கட்டிடங்களுக்காக சாக்கடைக்கால்களாவது சுகாதார சம்பந்தமான இசைப்புகளாவது இதர கட்டுவேலைகளாவது ஏற்படுத்தப்படுகின்றனவோ, கட்டப்படுகின்றனவோ, அமைக்கப்படுகின்றனவோ அல்லது மாற்றப்படுகின்றனவோ அப்படிப்பட்ட ஒவ்வொரு நபரும் கீழே கண்டிருக்கிற விதமாய் நடந்துகொள்ளவேண்டும்.

சாக்கடைக்காலின் பரிமாணம்.

8. அவர் - ஒவ்வொரு சாக்கடைக்காலும் போதுமான பரிமாணம் உள்ளதாயிருக்கும்படி செய்யவேண்டும்; எந்த விஷயத்திலும் அது உட்புறத்தில் நான்கு அங்குலத்துக்குக் குறைந்த குறுக்களவு உள்ளதாயிருக்கவுங்கூடாது, தண்ணீர் போவதற்கு அவசியமாயிருக்கக்கூடிய அல்லது என்ஜினீர் அங்கீகரிக்கக்கூடிய பரிமாணத்துக்கு அதிகமாயிருக்கவுங்கூடாது.

க்ரேடியென்டுகள்.

9. அவர் - ஒவ்வொரு சாக்கடைக்காலையும் என்ஜினீர் அங்கீகரிக்கிற பிரகாரம் போதுமான சாய்வு உள்ளதாய் அமைக்கும்படி செய்யவேண்டும். 4 அங்குல சாக்கடைக்கால்களுக்கு 40 ல் 1 ம், 6 அங்குல சாக்கடைக்கால்களுக்கு 80 ல் 1 ம் பரிமாண க்ரேடியென்ட் (வாட்டம்) ஆகும்; மேலும், இதை என்ஜினீரின் எழுத்துமூலமான அங்கீகாரத்துடனன்றி மற்றப்படி குறைக்கவாவது அதிகமாக்கவாவது கூடாது.

சாக்கடைக்கால்கள் நேராக இருக்கவேண்டுமென்பது.

10. அவர் - ஒவ்வொரு சாக்கடைக்காலையும் நேரான ரேகைகளிலும் ஒழுங்கான க்ரேடியென்டுகளுடனும் சாத்தியமான வரையில மிகவும் குறைந்த சங்கியையுள்ள வளைவுகளுடனும் அமைக்கும்படி செய்யவேண்டும்; மேலும், திசை மாறும் ஒவ்வொரு இடத்திலும் சரியாய் வளைந்துள்ள குழாய்களாவது கால்வாய்களாவது ஏற்படுத்தும்படி செய்யவேண்டும்.

சந்திப்புகளையும் வளைவுகளையும் மான்ஹோல்கள் இருக்குமிடங்களில் ஏற்படுத்தவேண்டுமென்பது.

11. அவர் - வளைவுகளையும் சந்திப்புகளையும் ஒன்றாய்த்தொகுக்கும்படி செய்து, அவைகளைச் சுற்றிலும் மான்ஹோல்களை (சுத்தம் செய்வதற்காக மனிதர்கள் உள்ளே போவதற்கான துவாரங்களை) கட்டுவதனால் அவற்றிற்குச் செல்வதற்கான வழிவகைகளை சாத்தியமான இடங்களிலெல்லாம் ஏற்படுத்தவேண்டும்.

சாமான்கள்.

12. அவர் - அழுக்கு ஜலதாரைகளுடன் அனேகமாய் சம்பந்தப்படக்கூடிய ஒவ்வொரு சாக்கடைக்கால், ஒவ்வொரு கால்வாய், மான்ஹோல் அல்லது உபகரணம் ஆகிய இவைகளின் மேற்புறமானது மழமழப்பாயும் வட்டவடிவமாயும் இருக்கும்படி செய்வதுடன், அதை (பளபளப்பான சுற்சாமானைப்போன்ற அல்லது தகுதியான கலப்பினால் துருபிடிக்காமல் பாதுகாக்கப்பட்ட தண்டவாளத்தைப்போன்ற) தண்ணீர் உட்புகுந்து செல்லக்கூடாத சாமானைக்கொண்டு செய்விக்கவும் அல்லது ஸிமெண்ட் மார்ட்டரினால் கட்டுவிக்கவும் வேண்டும்.

**குழாய்கள்.**

13. அப்படிப்பட்ட யாதொரு சாக்கடைக்காலே அவர் கல் குழாய்களைக்கொண்டு கட்டும்பட்சத்தில், அந்தக் குழாய்களின் கனமும் அவற்றின் ஸாக்கெட்டுகளின் ஆழமும், குறுக்களவுக்கேற்றபடி ஸிமென்டுக்கான வட்டவடிவுள்ள இடமும் அடியிற்கண்டபடி இருக்கவேண்டும் :—

| உட்புறத்துக் குறுக்களவு. | குழாயின் கனம் இன்ன அளவுக்குக் குறையக் கூடாதென்பது. | ஸாக்கெட்டின் ஆழம் இன்ன அளவுக்குக் குறையக்கூடாதென்பது. | ஸிமென்டுக்கான வட்ட வடிவுள்ள இடம் இன்ன அளவுக்குக் குறையக் கூடாதென்பது. |
|---|---|---|---|
| 4 அங்குலம். | $\frac{1}{2}$ அங்குலம். | 2 அங்குலம். | $\frac{3}{8}$ அங்குலம். |
| 6 ,, | $\frac{5}{8}$ ,, | 2 ,, | $\frac{1}{2}$ ,, |
| 9 ,, | $\frac{3}{4}$ ,, | $2\frac{1}{2}$ ,, | $\frac{1}{2}$ ,, |

கல் குழாய்கள் உட்புறத்திலும் வெளிப்புறத்திலும் உப்பினுல் மழமழப்பு செய்யப்பட்டு ஒவ்வொரு விஷயத்திலும் மிகச் சிறந்த இங்க்லிஷ் குழாய்களுக்கு சமமாய் இருக்க வேண்டும்.

அவை உண்மையில் ஸ்தம்ப வடிவமுள்ளவையாகவும், நேரானவையாகவும், முற்றிலும் மழமழப்பானவையாகவும், எல்லா விஷயங்களிலும் திடமானவையாகவும் இருக்க வேண்டும்.

விசேஷ குழாய்களாயிருந்தால், அவை வடிவத்தில் பரிபூர்ணமாயிருக்கவேண்டும் ; மேலும், வளைவு குழாய்களாயிருந்தால், அவை ஒரு வட்டத்தின் பாகங்களாயிருக்க வேண்டும்.

அவர் - அப்படிப்பட்ட யாதொரு சாக்கடைக்காலேத் தண்டவாளக் குழாய்களைக்கொண்டு கட்டும்பட்சத்தில், 6 அங்குலம் வரையில உட்புறத்துக் குறுக்களவுள்ள குழாய்களின் கனம் குறைந்தது $\frac{3}{8}$ அங்குலம் இருக்கவேண்டும். ஸாக்கெட் உள்பட ஒவ்வொரு 9 அடி நீளத்துக்கும் எடையானது, 4 அங்குலக் குழாய்களாயிருந்தால் 160 பவுண்டுக்குக் குறைந்தும் 6 அங்குலக் குழாய்களாயிருந்தால் 230 பவுண்டுக்குக் குறைந்தும் இருக்கக்கூடாது.

**சாக்கடைக்கால்களின் ஜாயின்டுகள்.**

14. அவர் - எல்லா குழாய்களுக்கும் ஸ்பிகாட் ஸாக்கெட் (ஒன்றுக்குள் ஒன்றைப் பொருத்துவதற்கான) ஜாயின்டுகளாவது, (ப்ளான்ஜ்ட்) விளிம்புள்ள அல்லது காலர் (பட்டைபோன்ற) ஜாயின்டுகளாவது (பொருத்தங்களாவது) ஏற்படுத்தும்படி செய்யவேண்டும் ; மேலும், அவை என்ஜினீரால் அங்கீகரிக்கப்பட்ட மாதிரியாகவும் லக்ஷணமுடையவையாகவும் இருக்கும்படியும் செய்யவேண்டும்.

அவர் அப்படிப்பட்ட சாக்கடைக்காலே கல் குழாய்களைக்கொண்டு கட்டும்பட்சத்தில், அந்த சாக்கடைக்காலே அவர் - கன பரிமாணத்தின்படி அளக்கப்பட்டதாய் ஒரு பங்கு போர்ட்லாண்ட் ஸிமென்டும் இரண்டு பங்கு மணலும் சேர்ந்த கலப்பைக்கொண்டு செம்மையாய் இணைக்கப்படும் ஸாக்கெட் ஜாயின்டுகளினுல் ஜாயின்ட்செய்விக்க (பொருத்துவிக்க) வேண்டும்.

அவர் அப்படிப்பட்ட சாக்கடைக்காலே ஸாக்கெட் ஜாயின்டுகளினுல் ஜாயின்ட்செய்துள்ள தண்டவாளக் குழாய்களைக்கொண்டு கட்டும்பட்சத்தில், அவர் - அப்படிப்பட்ட ஜாயின்டுகள் $2\frac{1}{2}$ அங்குலத்துக்குக் குறையாத ஆழம் உள்ளவையாகவும் உருக்கிய ஈயத்தினுல சந்தில்லாமல் நன்ருய் பிகியப்பட்டவையாகவும் இருக்கும்படி செய்யவேண்டும் ; மேலும், ஈயத்தைக் கொட்டும் வட்டவடிவுள்ள இடம் 4 அங்குலக் குழாய்களின் விஷயத்தில் அகலத்தில் $\frac{1}{4}$ அங்குலத்துக்குக் குறையாமலும் 6 அங்குலக் குழாய்களின் விஷயத்தில் அகலத்தில் $\frac{3}{8}$ அங்குலத்துக்குக் குறையாமலும் இருக்கும்படியும் செய்யவேண்டும்.

**தோண்டின இடங்கள்.**

15. அவர் - தோண்டப்படுகிற எல்லா இடங்களிலும் அடுத்திருக்கும் சொத்துக்களின் பாதுகாப்புக்காக அவசியமாயிருக்கிறபட்சத்தில் மரத்தினுல் தக்கபடி பந்தோபஸ்து செய்விக்கவேண்டும்.

**பதியவைப்பது**

16. அவர் - ஒவ்வொரு குழாயையும் உறுதியான தரையின்மேல் பத்திரமாய்ப் பதியவைத்து, அதைச் சுற்றிலும் பெரிய கற்கள் இல்லாமல் தேர்ந்தெடுக்கப்பட்ட வஸ்துவை நிரப்பி, தண்ணீர்விட்டு, அதை நன்ருய்ப் பொருந்தும்படி கெட்டிக்கச் செய்யவேண்டும். யாதொரு சாக்கடைக்கால் மெதுவான அல்லது தளர்ச்சியான பூமியின் வழியாகப் போகக்கூடியதாயிருந்தாலும் பள்ளத்தில் தண்ணீர் வரக்கூடியதாயிருந்தாலும், அவர் - அப்படிப்பட்ட சாக்கடைக்காலே என்ஜினீர் உத்தரவு செய்யக்கூடியபடி குறைந்தது நான்கு அங்குலம் நல்ல கான்க்ரீட்டில் பதிய வைக்கும்படியாகிலும் அதைச் சுற்றிலும் அதே அளவுக்கு நல்ல கான்க்ரீட் நிரப்புமபடியாகிலும் செய்யவேண்டும்.

17. அவர் - தகுதியான கலப்பு, தாரில் நனைத்த நூல், ஸிமென்ட் ஆகிய இவைகளைக் கொண்டாவது ஈயத்தைக்கொண்டாவது சகல குழாய்களையும் திறமையாய் ஜாயின்ட் செய்விக்கவேண்டும்; மேலும், சாக்கடைக்காலின் உட்புறததில் பிதுங்கிவந்திருக்கும் யாதொரு வஸ்து அல்லது உண்டாயிருக்கும் யாதொரு ஒழுங்கீனத்தை ஜாக்கிரதையாய் அகற்றிவிடச் செய்யவேண்டும்.

ஜாயின்ட் செய்தல்.

18. அவர் - அபபடிப்பட்ட ஒவ்வொரு சாக்கடைக்காலேயும் தண்ணீர் ஒழுகாமலிருக்கும்படி கட்டுவிக்கவேண்டும்; மேலும், அவர் - சாக்கடைக்காலின் மிகவும் உயர்ந்த ஸ்தானத்துக்குமேல் குறைந்தது நான்கடி உயரத்துக்குத் தண்ணீர் அமுத்தும்படிசெய்து, அதிகாரம்பெற்ற ஒரு உத்தியோகஸ்தரின் முன்னிலேயில், அதைப் பரிசோதிக்கவேண்டும். மேலேகண்டபடி தொடர்ச்சியாய் ஒரு மணிநேரத்துக்குத் தண்ணீர் அமுத்தும்படி செய்தபிறகு சாக்கடைக்காலில் தண்ணீர் ஒழுகும் அல்லது கசியும் குறிகள் எதுவும் காணக்கூடாது; மேலும், என்ஜினீருக்குத் திருப்திகரமாய் இந்தப் பரிசோதனையின்படி யாதொரு குழாய் நன்ருய் இருக்கிறதென்று ஏற்படுகிறவரையில் அதை மூடிவிடக் கூடாது.

சாக்கடைக்கால்கள் தண்ணீர் ஒழுகாதபடி இருக்கவேண்டுமென்பது.

19. அவர் - காற்றுவருவாய்க்குச் சம்பந்தமான சகாயச்சட்டத்தின்படி யாதொரு சாக்கடைக்காலுக்குள் காற்று வீசிக்கொண்டிருப்பதற்கான துவாரமாக ஏற்படுத்தப்பட்ட வழியல்லாமல் ஷை சாக்கடைக்காலுக்குள் தண்ணீர் போய்விழும் வேறே வழி ஒவ்வொன்றுக்கும், குறைந்தது இரண்டங்குலத்துக்குப் போதுமான தண்ணீர்த் தடை இருந்துவரும்படி செய்யக்கூடிய விதமாய்க் கட்டப்பட்ட திறமையான ட்ராப் ஒன்றை சரியான விதமாய் அமைக்கும்படி செய்யவேண்டும். பெல் (bell) ட்ராப், டிப் (dip) ட்ராப் அல்லது D ட்ராப் என்னும் வகையைச் சேர்ந்த எந்த ட்ராப்பையும் கட்டவாவது பொருத்தவாவது கூடாது.

சாக்கடைக்காலுக்குள் தண்ணீர் போய்விழும் வழிகளுக்கான ட்ராப்புகள்.

20. அவர் - கல்லிகள், ட்ராப்புகள், க்ரேட்டிங் என்னும் கிராதிகள், மூடிகள் அல்லது வேறே உபகரணங்கள் எல்லாவற்றையும் என்ஜினீரால் அங்கீகரிக்கப்பட்ட மாதிரியாகவும், அளவுள்ளவையாகவும், லக்ஷணமுள்ளவையாகவும் இருக்கும்படி செய்யவேண்டும். அவர் - கல்லிஞல் கட்டப்பட்ட ஒவ்வொரு கல்லியையும் குறைந்த பட்சம் 4 அங்குல கனம் உள்ள கான்க்ரீட் பரப்பின்மேல் அமைத்து, அதற்குள் தண்ணீரின் மட்டம் சுற்றிலும் உள்ள தளவரிசைக்கு குறைந்தது ஒரு அடிக்குக் கீழும், க்ரேடிட்ங் என்னும் கிராதியானது ஷை தளவரிசைக்குக் குறைந்தது ஒரு அங்குலத்துக்குக் கீழும் இருக்கும்படி ஷை கல்லியைப் பதியவைக்கச் செய்யவேண்டும்; மேலும், அவர் - அந்த க்ரேடிட்ங் என்னும் கிராதியின் அகலத்துக்குப் பாதிக்கு சரியான தூரத்துக்கு ஷை தளவரிசையில் கல்லியின் புறமாய் வாட்டம் ஏற்படுத்தும்படியும் செய்யவேண்டும்.

ட்ராப்புகளும் கல்லிகளும்.

21. அவர் - யாதொரு அழுக்கு ஜலதாரையோடாகிலும் மியுனிஸிபல் சாக்கடைக்காலோடாகிலும் நெருக்கத்தில் சம்பந்தப்படக்கூடிய அப்படிப்பட்ட கட்டிடத்தின் ஒவ்வொரு சாக்கடைக்காலுக்கும், அந்த சாக்கடைக்காலுக்குள்ளே தண்ணீர் போய்விழும வழிகளுக்குள் மிகத் தாழ்வாயிருக்கும் வழிக்குக் கீழ் ஒரு ஸ்தானத்திலும், அப்படிப்பட்ட சாக்கடைக்கால் அழுக்கு ஜலதாரையோடு சம்பந்தப்படக்கூடிய ஸ்தானத்துக்கு சாத்தியமானவரையில் அருகாமையிலும் தகுந்ததாயும் திறமையாயுமுள்ள பிரித்துவிடுவதற்கான ஒரு ட்ராப்பை, என்ஜினீர் உத்தரவு செய்யும்பட்சத்தில் ஏற்படுத்தவேண்டும்; மற்றப்படி ஏற்படுத்தக்கூடாது.

பிரித்துவிடுவதற்கான ட்ராப்.

அவர் - மான்ஹோலேயாவது என்ஜினீரால் அங்கீகரிக்கப்பட்ட உள்ளே போவதற்கான வேறே மார்க்கத்தையாவது ஏற்படுத்தி, அப்படிப்பட்ட ட்ராப்பை சுத்திசெய்வதற்காகப் போவதற்குப் போதுமான வழிவகைகளை ஏற்படுத்தவேண்டும்.

22. அவர் - சகாயச் சட்டங்களில் மேலே சொல்லப்பட்ட நிபந்தனைகளில் எதையாவது அனுசரித்து ஏற்படுத்தப்பட்ட உள்ளே போவதற்கான ஒவ்வொரு சாதனத்தையும் அடுத்துள்ள தரையின் மேற்புறத்தின் அல்லது பாட்டையின் மட்டம் வரையில் தண்ணீர் உட்புகாத விதமாய்க் கட்டும்படியும் காற்று உட்புகாதபடி தடுக்கத் தகுந்த இரும்பு மூடி ஒன்றை அமைக்கும்படியும் செய்யவேண்டும்.

மான்ஹோல்கள் முதலானவை தண்ணீர் உட்புகாதபடி இருக்கவேண்டுமென்பது.

23. அவர் - மியுனிஸிபல் சாக்கடைக்காலோடு சம்பந்தப்படுகிற அப்படிப்பட்ட கட்டிடத்தின் பல சாக்கடைக்கால்களையும், செங்குத்தாயாவது சம மட்டமாயாவது யாதொரு நேர்க்கோண சந்திப்பு அந்த சாக்கடைக்கால்களில் ஏற்படும் விதமாய்க் கட்டக்கூடாது. அவர் அப்படிப்பட்ட ஒவ்வொரு கிளைச்சாக்கடைக்கால் அல்லது உபசாக்கடைக்காலேயும் பிரதான

சாக்கடைக்கால் சந்திப்புகள்.

சாக்கடைக்காலில் தண்ணீர் ஓடும் திசையில் அந்த சாக்கடைக்காலோடு சாய்வாகச் சேரும்படி செய்யவேண்டும்.

கட்டிடங்களின் கீழே போகும் சாக்கடைக்கால்கள்.

24. அவர் - வேறே எந்த விதமாகவும் கட்டுவது சாத்தியமில்லாமலிருக்கக்கூடிய விஷயத்தில் தவிர மற்றப்படி அப்படிப்பட்ட யாதொரு சாக்கடைக்காலே யாதொரு கட்டிடத்தின்கீழே போகும்படியாய்க் கட்டக்கூடாது. அவர் அப்படிப்பட்ட சாக்கடைக்காலே யாதொரு கட்டிடத்தின் கீழே போகும்படியாய்க் கட்டும்பட்சத்தில், அப்போது அந்த சாக்கடைக்காலின் விஷயமாய் அவர் அடியிற்கண்ட திட்டங்களை அனுசரிக்கும்படி செய்யவேண்டும் :—

(a) அந்த சாக்கடைக்காலே கட்டிடத்தின் கீழே போகும் தூரமுழுமைக்கும் ஒரு நேரான ரேகையில் அமைக்கவேண்டும்.

(b) அந்த சாக்கடைக்காலே ஈயத்தினால் சந்தில்லாமல் பிகியப்பட்ட ஸாக்கெட் ஸ்பிகாட் ஜாயின்டுகளுள்ள தண்டவாளக் குழாய்களினாலாவது குறைந்தது 6 அங்குல கனத்துக்கு போர்ட்லாண்ட் ஸிமென்ட் கான்க்ரீட்டினால் சுற்றிலும் மூடப்பட்ட கல் குழாய்களினாலாவது கட்டவேண்டும்.

(c) அந்த சாக்கடைக்காலின் எந்த பாகம் அப்படிப்பட்ட கட்டிடத்தின் கீழே போகிறதோ அந்த பாகத்தின் ஒவ்வொரு முனையிலும் அங்கே போவதற்காகப்போதுமான வழிவகைகளை ஏற்படுத்தவேண்டும்.

சுவர்களுக்குக்கீழே போகும் குழாய்களைப் பாதுகாப்பது.

25. அவர் - சாக்கடைக்காலானது ஒரு சுவரின் மூலமாகவாவது அதன் கீழேயாவது அமைக்கப்படும் ஒவ்வொரு விஷயத்திலும், வில்லைப்போல் வளைந்த ஒரு கட்டிடத்தினாலாகிலும் இரும்பு கம்பிகள் போட்ட கருங்கல் பொடியைச்சேர்த்த கான்க்ரீட்டினாலாகிலும் சாக்கடைக்காலின்மேல் அழுத்தாததாயும் என்ஜினீருடைய அபிப்பிராயத்தில் அப்படிப்பட்ட சாக்கடைக்காலுக்கு யாதொரு இடையூறுயினும் வேறே கெடுதியாயினும் நேராமல் தடுப்பதற்குப் போதுமான பரிமாணமும் வலிவும் உள்ளதாயுமிருக்கிற ஒரு இரும்பு முட்டினாலாகிலும் சுவரின் மூலமாகவாவது கீழேயாவது அமைக்கப்படும் பாகத்தில் அந்த சாக்கடைக்காலுக்குப் பாதுகாப்பு ஏற்படுத்தும்படி செய்யவேண்டும்.

யாதொரு சாக்கடைக்கால் கட்டப்பட்டபிறகு அதன்மேலாவது அதைச்சுற்றிலுமாவது ஒரு சுவர் கட்டப்படும் விஷயத்தில், மேலே சொன்ன மாதிரியாகவே அந்த சாக்கடைக்கால் பாதுகாக்கப்படவேண்டும்.

## IV.—சாக்கடைக்கால்களுக்குக் காற்றுவருவாய் ஏற்படுத்துவது.

எந்த நபரால் அல்லது எந்த நபருக்காக புதிய அல்லது ஏற்கனவே இருக்கிற கட்டிடங்களுக்காக சாக்கடைக்கால்களாவது சுகாதாரசம்பந்தமான இசைப்புகளாவது இதர கட்டு வேலைகளாவது ஏற்படுத்தப்படுகின்றனவோ, கட்டப்படுகின்றனவோ, அமைக்கப்படுகின்றனவோ அல்லது மாற்றப்படுகின்றனவோ அப்படிப்பட்ட ஒவ்வொரு நபரும் கீழே கண்டிருக்கிற விதமாய் நடந்துகொள்ளவேண்டும்.

காற்றுவருவாய்க்கான துவாரங்கள் அமைக்கவேண்டுமென்பது.

26. அவர் - ஒவ்வொரு சாக்கடைக்கால் அல்லது கிளைச்சாக்கடைக்கால்களின் தலைப்பிலும் என்ஜினீர் அமைக்கவேண்டுமென்று கேட்கக்கூடிய இதர ஸ்தானங்களிலும் ட்ராப்பில்லாத ஒரு துவாரத்தை ஏற்படுத்தவேண்டும். அப்படிப்பட்ட காற்றுவருவாய்க்கான துவாரங்களுக்கு இடையில் யாதொரு ட்ராப்பாவது காற்று தாராளமாய் வீசுவதற்கு வேறே தடங்கலாவது இருக்கக்கூடாது.

ஒவ்வொரு துவாரத்தையும் அந்த சாக்கடைக்காலின் தலைப்பிலிருந்து ஒரு குழாய் அல்லது ஷாப்ட் என்னும் சாதனத்தை செங்குத்தாய் நிறுத்தி ஏற்படுத்தவேண்டும் ; இந்த குழாய் அல்லது ஷாப்டானது அடியிற்கண்ட திட்டங்களின்படி இருக்கவேண்டும் ; அவையாவன :—

அது—

(a) யாதொரு ஜன்னலிலிருந்தாவது யாதொரு கட்டிடத்துக்கு உள்ளேபோகும் எந்த துவாரத்திலிருந்தாவது 20 அடி தூரத்துக்குள்ளாகிலும் அப்படிப்பட்ட ஜன்னல் அல்லது துவாரத்துக்குக் கீழேயாகிலும் முடியக்கூடாது ;

(b) யாதொரு கூரையைச்சேர்ந்த இறவானத்தைத் தாங்குகிற ஒரு சுவருடன் அணைக்கப்பட்டிருந்தால், அப்படிப்பட்ட இறவானத்துக்குக் குறைந்தது இரண்டடிக்கு உயரமாகக் கொண்டுபோகப்படவேண்டும் ;

(c) அக்கம்பக்கத்தில் குடியிருக்கும் ஜனங்களுக்கு இடைஞ்சல் அல்லது அசௌகரியம் எவ்வளவும் நேரிடாதிருக்கும்படி அமைக்கப்படவேண்டும் அல்லது அணைக்கப்படவேண்டும்.

*பிரித்துவிடுவதற்கான ட்ராப் வேண்டியிருக்கும்போது செய்யவேண்டிய ஏற்பாடுகள்.*

27. பிரித்துவிடுவதற்கான ஒரு ட்ராப் அமைக்கவேண்டுமென்று என்ஜினீர் உத்தரவு செய்கிறபட்சத்தில், அவர் - அடுத்து முந்திய பகுதியில் சொல்லியிருக்கிறபடி செய்வதுடன், பிரித்துவிடுவதற்கான ஷை ட்ராப்புக்கு சாத்தியமானவரையில் சமீபத்திலும் அந்த ட்ராபபின் எந்தப் பக்கம் கட்டிடத்துக்கு அருகாமையில் இருக்கிறதோ அந்தப் பக்கத்திலும் ட்ராப்பில்லாத துவாரமொன்றை ஏற்படுத்தவேண்டும். மேலே சொல்லப்பட்ட துவாரமானது அடுத்துள்ள பூமிமட்டத்துக்கு சமீபத்திலும் அதற்கு மேலேயும் இருக்கவேண்டும்; மேலும், அதைத் தகுந்த குழாய், ஷாப்ட் அல்லது சேம்பரை (பெட்டியைப்போன்ற ஒரு கட்டிடத்தை)க்கொண்டு சாக்கடைக்காலோடு சம்பந்தப்படுத்தவேண்டும். யாதொரு விஷயத்தில் இந்த ஏற்பாடு உசிதமானதல்லவென்று என்ஜினீர் அபிப்பிராயப்பட்டால், அப்போது மேலே குறிப்பிடப்பட்ட ஸ்தானத்திலிருந்து அடுத்து முந்திய (கூ. 26) சகாயச்சட்டத்தில், குறிப்பிட்டிருக்கிறபடி தகுந்த செங்குத்தான ஒரு குழாய் அல்லது ஷாப்டை மேலே கொண்டுபோய் ஷை துவாரத்தை ஏற்படுத்தலாம்.

*துவாரங்களைப் பாதுகாக்கவேண்டுமென்பது.*

28. அவர் - இதில் முன்னால் குறிப்பிட்டுள்ள ஏற்பாடுகளில் எதன்படியாவது ஏற்படுத்தப்பட்ட ஒவ்வொரு துவாரத்துக்கும், அப்படிப்பட்ட யாதொரு துவாரத்தின் மூலமாய் எந்த வஸ்துவாவது உள்ளே சென்று யாதொரு குழாய் அல்லது சாக்கடைக்காலில் எவ்விதத் தடங்கலும் ஏற்படாமலாகிலும் அதற்கு யாதொரு தீங்கு நேரிடாமலாகிலும் தடுப்பதற்காக தகுந்த ஒரு க்ரேட்டிங் என்னும் கிராதியையாவது வேறே தகுந்த மூடியையாவது சவதரிக்கச்செய்யவேண்டும். அவர் - ஒவ்வொரு விஷயத்திலும், அப்படிப்பட்ட க்ரேட்டிங் என்னும் கிராதி அல்லது மூடியை, போதுமானமட்டில் துவாரங்கள் ஏற்படுத்தி அந்த க்ரேடிங் என்னும் கிராதி அல்லது மூடியின் மூலமாகக் காற்று தாராளமாய் வீசக்கூடிய மாதிரியாய்க் கட்டும்படியும் அமைக்கும்படியும் செய்யவேண்டும்; அந்த துவாரங்களின் மொத்தப் பரப்பானது அந்த க்ரேட்டிங் என்னும் கிராதி அல்லது மூடி எந்த குழாய் அல்லது சாக்கடைக்காலுக்கு அமைக்கப்படக்கூடுமோ அதன் ஸெக்ஷன் விஸ்தீர்ணத்துக்கு (அந்த சாக்கடைக்காலே குறுக்கே வெட்டுவதாய் ஏற்படும் இடத்தின் விஸ்தீர்ணத்துக்கு) குறைந்திருக்கக்கூடாது.

*குழாயில் வளைவுகளாவது கோணங்களாவது இருக்கக்கூடாதென்பது.*

29. அவர் - இதில் முன்னால் குறிப்பிட்டிருக்கிற ஏற்பாடுகளில் எதன் சம்பந்தமாயாவது உபயோகிக்கப்படும் யாதொரு குழாய் அல்லது ஷாப்டில், தவிர்க்கக்கூடாததாயிருந்தாலன்றி மற்றப்படி, யாதொரு வளைவாவது கோணமாவது ஏற்படும்படி செய்யக்கூடாது.

*குழாய்களின் குறுக்களவு.*

30. அவர் - இதில் முன்னால் குறிப்பிட்டிருக்கிற ஏற்பாடுகளில் எதன் சம்பந்தமாயாவது உபயோகிக்கப்படக்கூடிய ஒவ்வொரு குழாய் அல்லது ஷாப்டும் 4 அங்குலத்துக்குக் குறையாமல் உட்புறத்தில் குறுக்களவு உள்ளதாயிருக்கும்படியும், தண்டவாளத்தினால் செய்யப்பட்ட ஸ்பிகாட் ஸாக்கெட் ஜாயின்டுள்ள வேஸ்ட் பைப் என்னும் (மலம் நீக்கிய) அழுக்குநீர்க் குழாய்களுக்கும் காற்றுவருவாய்க்கான குழாய்களுக்கும் ப்ரிடிஷ் பரிமாண விவரக்குறிப்பை அனுசரித்திருக்கும்படியும் செய்யவேண்டும்.

*ஸாயில் பைப் என்னும் மலக்குழாய்களைக் காற்றுவருவாய்க்கான குழாய்களாக உபயோகிப்பது.*

31. ஆனால், யாதொரு வாட்டர் க்ளாஸெட் என்னும் கக்கூஸைச்சேர்ந்த எந்த ஸாயில் பைப் என்னும் மலக்குழாயாவது - ஸ்தானம், ஸெக்ஷன் விஸ்தீர்ணம், உயரம், கட்டப்பட்டிருக்கும் விதம் ஆகிய இந்த விஷயங்களிலும் இன்னும் இதரமான சகல விஷயங்களிலும் 26ம்கூ சகாயச்சட்டத்தில் குறிப்பிட்டிருக்கும் குழாய் அல்லது ஷாப்டுக்குப் பிரயோகப்படத்தக்க நிபந்தனைகளை அனுசரித்திருக்கும் பட்சத்தில், அப்போது அப்படிப்பட்ட மலக்குழாயினால் 26ம்கூ சகாயச்சட்டத்தின்படி வேண்டியிருக்கிற துவாரம் ஏற்படுவதாக எண்ணலாம்.

## V.—வேஸ்ட் பைப் என்னும் (மலம் நீக்கிய) அழுக்குநீர்க் குழாய்கள்.

எந்த நபரால் அல்லது எந்த நபருக்காக புதிய அல்லது ஏற்கனவே இருக்கிற கட்டிடங்களுக்காக சாக்கடைக்கால்களாவது சுகாதாரசம்பந்தமான இசைப்புகளாவது இதர கட்டுவேலைகளாவது ஏற்படுத்தப்படுகின்றனவோ, கட்டப்படுகின்றனவோ, அமைக்கப்படுகின்றனவோ அல்லது மாற்றப்படுகின்றனவோ அப்படிப்பட்ட ஒவ்வொரு நபரும் கீழே கண்டிருக்கிற விதமாய் நடந்துகொள்ளவேண்டும்:

*வஸ்துக்களும் பரிமாணங்களும்.*

32. அவர் - யாதொரு ஸ்நானம் செய்யுமிடம், முகமுதலியவை கழுவிக்கொள்ளுமிடம், குழி அல்லது அதைப்போன்ற (கெட்டியாயுள்ள அல்லது திரவரூபமாயுள்ள மலஜலசம்பந்தமான யாதொரு அசுத்தம் சேருவதற்காக உபயோகிக்கும்பொருட்டு கட்டப்பட்ட அல்லது பொருத்திக்கொள்ளப்பட்ட ஸ்லாப் ஸிங்க் என்னும் குழி அல்லது மூத்திரம் பெய்யு

மிடமாயிராத) உபகரணத்திலிருந்து வரும் ஒவ்வொரு அழுக்குநீர்க் குழாயையும் ஈயம் அல்லது தண்டவாளத்தினுல் உட்புறத்தில் $1\frac{1}{2}$ அங்குலம் முதல் 2 அங்குலம் வரையில் குறுக்களவு இருக்கும்படி செய்விக்கவேண்டும் ; மேலும், அந்த அழுக்குநீர்க் குழாய்க்கு, ஷி முகமுதலியவை கழுவிக்கொள்ளுமிடம் அல்லது குழிக்கு நேர்க் கீழே பரிசோதிப்பதற்கும் சுத்தம் செய்வதற்கும் போதுமான வழிவகைகளுடன், ஈயம், இரும்பு, பித்தளை அல்லது கல் சாமான்களைக்கொண்டு கட்டப்பட்ட திறமையான ஒரு ஸைபன் ட்ராப்பை ஏற்படுத்தவேண்டும் ; அல்லாமலும், அந்த ட்ராபபிலுள்ள தண்ணீர் தடையைப் பாதுகாப்பதற்கு வெளிப்புறத்துக்காற்று உள்ளே வீசுவது அவசியமாயிருக்கும்போதெல்லாம் அப்படி ஷி ட்ராப்பில் காற்று வீசும்படி ஏற்பாடு செய்யவேண்டும்.

ட்ராப்புகள்.

அப்படிப்பட்ட அழுக்குநீர்க் குழாய், முகமுதலியவை கழுவிக்கொள்ளுமிடம் அல்லது குழியிலாவது அது சம்பந்தமாயாவது அவர் - பெல் ட்ராப், டிப் ட்ராப் அல்லது D ட்ராப் என்று சொல்லப்படும் வகையைச் சேர்ந்த யாதொரு ட்ராப்பைக் கட்டவாகிலும், அமைக்கவாகிலும் கூடாது.

ஈயக்குழாய்கள் உபயோகிக்கப்படும்பட்சத்தில் அவை முழுவதும் ஒரே கனம் உள்ளவையாயிருக்கவேண்டும் ; மேலும், அவை - $1\frac{1}{2}$ அங்குலக் குழாய்களின் விஷயத்தில் நீள அடி ஒன்றுக்கு குறைந்தது $2\frac{3}{4}$ பவுண்டும் 2 அங்குலக் குழாய்களின் விஷயத்தில் நீள அடி ஒன்றுக்கு $3\frac{3}{4}$ பவுண்டும் மூன்றங்குலக் குழாய்களின் விஷயத்தில் நீள அடி ஒன்றுக்கு $5\frac{1}{2}$ பவுண்டும் எடை உள்ளவையாயிருக்கவேண்டும்.

தண்டவாளக் குழாய்கள் உபயோகிக்கப்படும்பட்சத்தில், அவை - தண்டவாளத்தினுல் செய்யப்பட்ட ஸ்பிகாட் ஸாக்கெட் ஜாயின்டுள்ள வேஸ்ட் பைப் என்னும் அழுக்குநீர்க் குழாய்களுக்கும் காற்றுவருவாய்க்கான குழாய்களுக்கும் ப்ரிடிஷ் பரிமாண விவரக்குறிப்பை அனுசரித்திருக்கவேண்டும்.

கல்வியின் மேலாக திறந்தவெளியில்போய் விழவேண்டுமென்பது.

33. அவர் - யாதொரு கட்டிடத்திலுள்ள அழுக்குத்தண்ணீரைக் கொண்டுபோவதற்கான அப்படிப்பட்ட ஒவ்வொரு குழாயையும் அந்தக் கட்டிடத்தின் வெளிப்புறத்திலுள்ள ஒரு சுவரின்மூலமாய் சாத்தியமான வரையில் மிகவும் குறுகின மார்க்கத்தில் கொண்டுபோகச்செய்து சரியானபடி ட்ராப் அமைக்கப்பட்டுள்ள ஒரு கல்வியின் மேலாகவாவது அப்படிப்பட்ட கல்வியுடன் போய்ச்சேரும் கால்வாயின்மேலாகவாவது திறந்த வெளியில் போய் விழும்படிச் செய்யவேண்டும்.

ஆதாரங்கள்.

34. அவர்-அப்படிப்பட்ட அழுக்குநீர்க் குழாயை என்ஜினீருக்குத் திருப்திகரமாயிருக்கும் மாதிரியாக சுவர்களோடு உறுதியாய் அணைக்கச் செய்யவேண்டும். (ஷி குழாய்) தண்டவாளத்தினுல் செய்யப்பட்டதாயிருக்கும்பட்சத்தில், சரியாய் நாட்டப்பட்ட ஹோல்டர்பாட் என்னும் அக்குழாயை அசையாமல் பத்திரமாய்த் தாங்குவதற்கான ஆதாரங்களை உபயோகிக்கவேண்டும் ; ஆனுல், அவர் - என்ஜினீர் தகுதியானதென்றும் திறமையானதென்றும் எண்ணுகிற விதமாக அந்தக் குழாய்களை பத்திரமாய்ச் சுவர்களுடன் இணைப்பது எப்பொழுதும் போதுமானதாகும்.

## VI.—வாட்டர் க்ளாஸெட் என்னும் கக்கூஸ்களும் (சாதாரண) கக்கூஸ்களும் மூத்திரம் பெய்யுமிடங்களும் ஸ்லாப்ஸிங்க் என்னும் குழிகளும் அவைகளுக்குக் கிரமமாய் வேண்டியிருக்கும் உபகரணங்களும்.

எந்த நபரால் அல்லது எந்த நபருக்காக புதிய அல்லது ஏற்கனவே இருக்கிற கட்டிடங்களுக்காக சாக்கடைக்கால்களாவது சுகாதார சம்பந்தமான இசைப்புகளாவது இதர கட்டு வேலைகளாவது ஏற்படுத்தப்படுகின்றனவோ, கட்டப்படுகின்றனவோ, அமைக்கப்படுகின்றனவோ அல்லது மாற்றப்படுகின்றனவோ அப்படிப்பட்ட ஒவ்வொரு நபரும் கீழேகண்டிருக்கிற விதமாய் நடந்துகொள்ளவேண்டும்.

நிலைமை.

35. அவர்-கெட்டியாயுள்ள அல்லது திரவரூபமாயுள்ள மலஜலசம்பந்தமான யாதொரு அசுத்தம் சேருவதற்காக உபயோகிக்கும்பொருட்டு கட்டப்பட்ட அல்லது பொருத்திக்கொள்ளப்பட்ட ஒவ்வொரு பேஸின் என்னும் தொட்டி, மூத்திரம் பெய்யும் இடம், ஸ்லாப் ஸிங்க் என்னும் குழி அல்லது எனத்தையும் ஒரு வாட்டர் க்ளாஸெட் என்னும் கக்கூஸ் அல்லது (சாதாரண) கக்கூஸுக்குள் அமைக்கும்படிசெய்யவேண்டும். அவர் - அப்படிப்பட்ட வாட்டர் க்ளாஸெட் என்னும் கக்கூஸ் அல்லது (சாதாரண) கக்கூஸை அதன் பக்கங்களில் குறைந்தது ஒன்றாவது ஒரு வெளிப்புறத்துச் சுவராக இருக்கும் நிலைமையில் கட்டவேண்டும். அப்படிப்பட்ட யாதொரு வாட்டர் க்ளாஸெட் என்னும் கக்கூஸை, ஜனங்கள் குடியிருக்கும் காரியத்துக்காக உபயோகிக்கப்படும் அல்லது மனிதர்களுக்கான உணவைச் செய்யவாவது தயார்செய்யவாவது சேர்த்துவைக்கவாவது உபயோகிக்கப்படும் அல்லது தொழிற்சாலையாகவாவது பட்டறையாகவாவது வேலை செய்யுமிடமாகவாவது உபயோகிக்கப்படும் யாதொரு அறையிலிருந்து அதற்கு நேராகச் செல்லக்கூடியதாயிருக்கும்படி அவர் கட்டக்கூடாது ; மேலும், தண்ணீர் வேகமாய் விழுந்து சுத்தம் செய்யப்படுவதல்லாத வேறே யாதொரு வாட்டர் க்ளாஸெட் என்னும் கக்கூஸ் அல்லது (சாதாரண) கக்கூஸை, வெளிப்புறத்திலிருந்தல்லாமல் மற்றப்படி அதில் நுழையக்கூடியதாயிருக்கும்படி அவர் கட்டக்கூடாது.

*அமைப்பு.*

36. அப்படிப்பட்ட வாட்டர் க்ளாஸெட் எனனும் கக்கூஸ் அல்லது (சாதாரண) கக்கூஸ் உட்பக்கத்தில் குறைந்தது 4 அடி நீளமும 2 அடி 9 அங்குலம் அகலமும் இருக்கவேணடும் ; அதை அதன் எந்தப் பக்கம் ஜனங்கள் குடியிருக்கும்காரியத்துக்காக உத்தேசிக்கப்படும் அல்லது மனிதர்களுக்கான உணவைச் செய்யவாவது தயார்செய்யவாவது சேர்த்துவைக்கவாவது உபயோகிக்கப்படும் அல்லது தொழிற் சாலையாகவாவது பட்டடையாகவாவது வேலைசெய்யுமிடமாகவாவது உபயோகிக்கப்படும் யாதொரு அறையைச் சார்ந்திருக்குமோ அந்தப் பக்கத்தில் தரையிலிருந்து மச்சுவரையிலும் உள்ள முழு உயரத்துக்கும் கெட்டியான சுவரினலாகிலும கல அல்லது செங்கல்லால் கட்டப்பட்ட குறுக்குச்சுவரினலாகிலும் அடைக்கப்பட்டிருக்கும்படி அவர்கட்டவேண்டும். அப்படிப்பட்ட யாதொரு வாட்டர் களாஸெட் என்னும் கக்கூஸ் அல்லது(சாதாரண)கக்கூஸுக்கு கெட்டியாயுள்ளதும் மழமழப்பாயுள்ளதும் தண்ணீர் உட்புகுந்து செல்லக்கூடாததுமான சாமான்களைக்கொண்டு அமைக்கப்பட்ட தரையை ஏற்படுத்தவேண்டும் ; மேலும், உயரத்திலிருக்கும் ஏனம் அல்லது பேஸின் என்னும் தொட்டியின் விஷயத்தில் வெளிப்புறத்தில் திறக்கும் கதவின் பக்கமாகவும், பேஸின் என்னும் தொட்டி தரையுடன் சமமட்டத்தில் அமைக்கப்பட்டிருந்தால் அந்த தொட்டியின் பக்கமாகவும் அடி ஒன்றுக்கு அரை அங்குலம் சாய்வுள்ளதாய் ஷை தரையை அமைக்கவேண்டும். அவர் - வீட்டின் அடிதளத்தில் இருககும் சகல வாட்டர் க்ளாஸெட் என்னும் கக்கூஸ் அல்லது (சாதாரண) கக்கூஸுகளின் தரையானது வெளியிலிருக்கும பூமிக்குமேல் குறைந்தது 6 அங்குல உயரத்தில் இருககும்படி செய்யவேண்டும். அவர் - அப்படிப்பட்ட வாட்டர் க்ளாஸெட் என்னும் கக்கூஸ் அல்லது (சாதாரண)கக்கூஸுகளுக்குத் தகுந்தகதவுகளும் தாழ்ப்பாள்களும் ஏற்படுத்தவேண்டும்.

*வெளிச்சத்துக்காகவும் காற்று வருவாய்க்காகவும் ஏற்பாடுசெய்வது.*

37. அவர்-அப்படிப்பட்டவாட்டர் க்ளாஸெட் என்னும் கக்கூஸ் அல்லது(சாதாரண) கக்கூஸின வெளிப்புறத்துச் சுவர்கள் ஒன்றில் குறைந்தது 2 சதுர அடி விஸ்தீர்ணமுள்ள ஒரு ஜன்னல் அல்லது துவாரத்தை, யாதொருவெளிப்புறத்துச் சுவரின் மூலமாய் தரைக்கு சமீபத்தில 18 சதுரஅங்குலத்துக்குக் குறையாமலும், சாத்தியமான அவ்வளவு உயரத்தில்72 சதுர அங்குலத்துக்குக் குறையாமலும் மொத்த விஸ்தீர்ணமுள்ள காற்றுவருவாய்க்கான துவாரங்கள் சகிதமாகக் கட்டவேண்டும்.

*ப்ளஷிங் ஸிஸ்டர்ன்.*

38. அவர் -அப்படிப்பட்ட வாட்டர் க்ளாஸெட் என்னும் கக்கூஸ் அல்லது(சாதாரண) கக்கூஸில் (தண்ணீர் வேகமாய் விழுந்து) சுத்தம் செய்வதற்காக, $2\frac{1}{2}$ காலனுக்குக் குறையாமலும், என்ஜினீரால் அங்கீகரிக்கப்பட்டாலொழிய 3 காலனுக்கு மேற்படாமலும பிடிக்கக்கூடிய பரிமாண முள்ளதாய் தண்ணீர் வீணாய்ப்போவதைத் தடுக்கும் மாதிரியாயுள்ள ஒரு தொட்டியை வைக்கவேண்டும் : இது தணணீர் குடிக்கும் காரியங்களுக்கு உபயோகிக்கப்படும் எந்த தொட்டியுடனும் சேராமல் வேறாக இருக்கவேண்டும் ; மேலும், அதன் அடியிலிருந்து பளஷ் பைப் என்னும் குழாயில் தணணீர் வெளியே விழும் ஸ்தானம் வரையில் அளக்கப்பட்டால் குறைந்தது 5 அடி உயரத்திலிருந்து (தண்ணீர்) அழுத்தக்கூடியதாயும், அந்த வளவின்மேல் உள்ள யாதொரு ஸெர்விஸ் பைப் என்னும் குழாய்க்கும் ஷை ப்ளஷிங் ஸிஸ்டர்னை (வேகமாய்விழுந்து சுத்தஞ்செயவதற்காக தண்ணீர் நிரப்பிய தொட்டியை)த் தவிர அப்படிப்பட்ட வாட்டர் க்ளாஸெட் என்னும் கக்கூஸ் அல்லது (சாதாரண)கக்கூஸைச்சேர்ந்த வேறு உபகரணத்தின் யாதொரு பாகத்துக்கும் நேராக எவ்வித சம்பந்தமும் ஏற்படாத விதமாய் ஷை வாட்டர் க்ளாஸெட் என்னும் கக்கூஸ் அல்லது கக்கூஸின் உபயோகத்துக்காக தண்ணீர் சர்ப்பராசெய்வது சாத்தியமாயிருக்கும்படி ஷை தொட்டியைக்கட்டி அமைத்துவைத்திருக்கவேண்டும்.

அவர் - அப்படிப்பட்ட ஒவ்வொரு தொட்டியிலும் ஸப்ளை பைப் என்னும் தண்ணீரை சர்ப்பரா செய்யும் குழாயின்மேல் அமைக்கப்பட்ட தகுந்த பால்காக் என்னும் உபகரணத்தையும் ஓவர்ப்ளோ பைப் என்னும் அதிகமான தண்ணீரைக் கொண்டுபோவதற்கான குழாயையும் ஏற்படுத்தவேண்டும் ; பின் சொல்லப்பட்ட குழாயிலுள்ள தண்ணீரானது திறந்த வெளியில் நன்றாய்த் தெரியும்படியான ஒரு இடத்திலேபோய் விழவேண்டும். ஆனல், யாதொரு சாக்கடைக்காலுக்குள் தண்ணீர் போகும் வழியின்மேல் விழக்கூடாது—தணணீர்க் கட்டுவேலைகள் சம்பந்தமான சகாயச்சட்டங்களையும பார்க்கவும்.

*தானகவே இழங்கும் ப்ளஷிங் உபகரணம்.*

39. அவர் - கம்மிஷனரின் எழுத்துமூலமான அனுமதியுடனன்றி மற்றப்படி தானகவே இயங்கும் யாதொரு ப்ளஷிங் (தண்ணீர் வேகமாய் விழுந்து சுத்தம் செய்வதற்கான) உபகரணத்தைக் கட்டவாவது அமைக்கவாவது கூடாது. கம்மிஷனரின் அனுமதி கிடைத்திருக்கிற விஷயங்களில் அவர்-அந்த உபகரணத்தின் பரிமாணத்தையும்,அது எந்த சாமான்களைக்கொணடு செய்யப்படப்போகிறதோ அவைகளையும், அது வேலைசெய்யும் விதத்தையும் அது எத்தனை தரம் வேலைசெய்யுமென்பதையும் காட்டும் விரிவான விவரக்குறிப்புகளையும் படங்களையும் என்ஜினீரின் அங்கீகாரத்துக்காக அனுப்பவேண்டும் ; மேலும் அவர் - அந்த உபகரணத்தை என்ஜினீர் உத்தரவு செய்யக்கூடிய எந்த விதமாகவாவது மாற்றவும் வேண்டும்.

*ப்ளஷிங் பைப் என்னும் குழாய்.*

40. அவர்-அப்படிப்பட்ட வாட்டர் க்ளாஸெட் என்னும்கக்கூஸ் அல்லது சாதாரண கக்கூஸில் ஏற்படுத்தப்படக்கூடிய சட்டி, பேஸின் என்னும் தொட்டி அல்லது வேறே ஏனத்துடன் ஷை ப்ளஷிங் ஸிஸ்டர்னைச் சம்பந்தப்படுத்தும் குழாயையும் இணைப்பையும், அந்தக் குழாயும் இணைப்பும் எந்த பக்கத்திலும் உட்புறத்தில் குறுக்களவு $1\frac{1}{4}$ அங்குலத்துக்குக் குறையாமலிருக்கும்படி கட்ட அல்லது அமைக்கவேண்டும். அந்தக் குழாயை சாத்தியமானவரையில் செங்குத்தாகவே அமைக்கவேண்டும்.

*வாட்டர்க்ளாஸெட் என்னும் கக்கூஸில் உள்ள ஏனத்துக்கான ட்ராப்பும் தண்ணீர் வேகமாய் விழுவதற்கான ஏற்பாடும்.*

* 41. அவர்-அப்படிப்பட்ட வாட்டர் க்ளாஸெட் என்னும் கக்கூஸ் அல்லது சாதாரண கக்கூஸில் தகுந்த ஒரு உபகரணத்தை அமைக்கவேண்டும் ; இதன் மாதிரி ஒன்றை என்ஜினீரிடத்தில் முன்னதாகவே கொடுத்துவைத்திருந்து அது அவரால் எழுத்துமூலமாய் அங்கீகரிக்கப்பட்டிருக்கவேண்டும்.

அப்படிப்பட்ட உபகரணத்தில் அடியிற்கண்டவை அடங்கியிருக்கவேண்டும் :—

(1) (a) போதுமான அளவுக்குத் தண்ணீரைப் பெறுவதற்கும் கொள்ளுவதற்கும்,

(b) அப்போதைக்கப்போது ஏனத்தில் சேரக்கூடிய கெட்டியான சகல அசுத்தங்களும் அதனுடைய பக்கங்களில் படாமல் ஷை ஏனத்தில் அடங்கியுள்ள தண்ணீரில் நேராய் விழுவதும் மூத்திரத்தினால் அசுத்தமாகக்கூடிய மேற்புறம் கூடியமட்டில் குறைந்திருப்பதும் சாத்தியமாயிருப்பதற்கும்,

(c) சிறிதளவு தண்ணீரினால் நன்றாய் அடித்துக்கொண்டுபோவதற்கும் சுத்தம செய்யப்படுவதற்கும்

ஏற்ற வடிவமும் பரிமாணமும் அமைப்பும் உள்ள தகுந்த ஒரு ஏனம்.

‘வாஷ் ஔட்’ என்னும் மாதிரியாயுள்ள அல்லது ‘கன்டெய்னர்’ என்னும் உபகரணமாவது அதைப்போன்ற வேறே இசைப்புகளாவது உள்ள எந்த ஏனத்தையும் அமைக்கக்கூடாது.

(2) மேலே சொல்லப்பட்ட ஏனத்தோடு நேராய்ச் சம்பந்தப்பட்டிருக்கிறதும் பிரத்தியேகமாய் அனுமதி கொடுக்கப்பட்டிருந்தாலன்றி மற்றப்படி அதனுடன் சேர்ந்ததாயிருப்பதுமான தகுந்த ஒரு ஸைபன் ட்ராப் ; இதை அந்த ஏனத்தில் போதுமான அளவுக்குத் தண்ணீர் இருந்துவரும்படியும் அப்படிப்பட்ட ஏனத்துக்கும் அதோடு சம்பந்தப்பட்டிருக்கிற யாதொரு மலக்குழாய் அல்லது சாக்கடைக்காலுக்கும் இடையில் 2 அங்குலத்துக்குக் குறையாத தண்ணீர்த் தடை நிச்சயமாய் ஏற்படும்படியும் அமைக்கவேண்டும். சாத்தியப்படாமலிருந்தாலன்றி மற்றப்படி, அப்படிப்பட்ட ஸைபன் ட்ராப்பின் வெளித்துவாரத்தண்டை சுலபமாய்ப் போவது சாத்தியமாயிருக்கவேண்டும்.

(3) அப்படிப்பட்ட ஏனத்தில் தண்ணீர் வேகமாய் விழுந்து அதை நன்றாய் சுத்தம் செய்வதும், அதிலும் அதோடு சம்பந்தப்பட்ட ட்ராப்பிலும் அப்போதைக்கப்போது சேரக்கூடிய கெட்டியாயுள்ள அல்லது திரவரூபமாயுள்ள யாதொரு அசுத்தத்தை அதிலிருந்தும் அந்த ட்ராப்பிலிருந்தும உடனுக்குடனேயும் நன்றாகவும் அப்புறப்படுத்திவிடுவது சாத்தியமாகும் விதமாய் அந்த ஏனத்தில் தண்ணீர் செலுத்துவதற்கான ஒரு தகுந்த ஏற்பாடு.

*மூடிகள் ஏற்படுத்தக்கூடாதென்பது.*

42. அவர்-யாதொரு வாட்டர் க்ளாஸெட் என்னும் கக்கூஸைச்சேர்ந்த எந்த ஏனம், ஸிஸ்டர்ன் அலலது வேறே உபகரணத்தைச் சுற்றிலும் மரத்தினாலாவது இதர வஸ்துவினாலாவது எவ்வித மூடியையும் (கேஸிங்கையும்) அமைக்கக்கூடாது.

## VII. மலக்குழாய்கள்.

எந்த நபரால் அல்லது எந்த நபருக்காக புதிய அல்லது ஏற்கனவே இருக்கிற கட்டடங்களுக்காக சாக்கடைக்கால்களாவது சுகாதார சம்பந்தமான இசைப்புகளாவது இதர கட்டுவேலைகளாவது ஏற்படுத்தப்படுகின்றனவோ கட்டப்படுகின்றனவோ அமைக்கப்படுகின்றனவோ அலலது மாற்றப்படுகின்றனவோ அப்படிப்பட்ட ஒவ்வொரு நபரும் கீழே கண்டிருக்கிற விதமாய் நடந்துகொள்ளவேண்டும்.

*நிலைமை.*

43. அவர் - கெட்டியாயுள்ள அல்லது திரவரூபமாயுள்ள மலஜல சம்பந்தமான யாதொரு அசுத்தத்தை சாக்கடைக்காலுக்குக் கொண்டுபோகும் காரியத்துக்காக ஏற்படுத்தப்படும் ஒவ்வொரு மலக்குழாயை

---

* குறிப்பு.—சென்னபட்டணத்துக்குத் தகுந்த கக்கூஸுகளின் மாதிரிகளைக்காட்டும் படங்கள் தயார் செய்யப்பட்டிருக்கின்றன, அவைகளை மியுனிஸிபல் ஆபிஸில் பார்வையிடலாம்.

யும் சாத்தியமாயிருக்கும்போதெல்லாம் அப்படிப்பட்ட கட்டிடத்துக்கு வெளிப்புறத்தில் அமைக்கும்படி செய்யவேண்டும்; மேலும், அப்படிப்பட்ட மலக்குழாயை உருக்கிவார்த்த ஈயத்தினலாவது தண்டவாளத்தினலாவது கட்டவேண்டும். ஆனல், ஷ மலக்குழாயை அப்படிப்பட்ட கட்டிடத்துக்குள் கட்டுவது அவசியமாயிருக்கும் யாதொரு விஷயத்தில், கண்ணுக்குத் தெரியுமிடங்களிலும் சுலபமாய்ப் போகக்கூடியபடியுமுள்ள ஜாயின்டுகளோடு உருக்கிவார்த்த ஈயத்தினல் அவர் அந்தக் குழாயைக் கட்டவேண்டும். ஈயக்குழாய்களை உபயோகித்தால், அவை கெட்டியான உருக்கிவார்த்த ஈயத்தினல் செய்யப்பட்டவைகளாய் குறைந்தது 4 அங்குலம் குறுக்களவும் முழுவதிலும் ஒரே மாதிரியான கனமும் உள்ள குழாய்களாயிருக்கவேண்டும்; மேலும், அவை-4 அங்குலக் குழாய்களாயிருந்தால் நீளத்தில் அடி ஒன்றுக்குக் குறைந்தது $7\frac{1}{4}$ பவுண்டும், 5 அங்குலக் குழாய்களாயிருந்தால் நீளத்தில் அடி ஒன்றுக்கு $9\frac{1}{4}$ பவுண்டும், 6 அங்குலக் குழாய்களாயிருந்தால் நீளத்தில் அடி ஒன்றுக்கு 11 பவுண்டும் எடை உள்ளவைகளாயிருக்கவேண்டும். தண்டவாளக் குழாய்களை உபயோகித்தால், அவை-தண்டவாளத்தினல் செய்த ஸ்பிகாட் ஸாக்கெட் ஜாயின்டுகளுள்ள மலக்குழாய்களுக்கான ப்ரிடிஷ் பரிமாண விவரக்குறிப்பை அனுசரித்திருக்கவேண்டும்.

*சாமான்கள்.*

*கனமும் எடையும்.*

44. அவர் - அப்படிப்பட்ட மலக்குழாய்க்கு அடியில் ஒரு கான்க்ரீட் பரப்பினல் பலமாய் ஆதாரம் ஏற்படுத்துவதுமல்லாமல், அந்தக் குழாய் சுவர்களில் உறுதியாய் அணைக்கப்படும்படியாயும் செய்யவேண்டும். மலக்குழாய் தண்டவாளத்தினல் செய்ததாயிருந்தால், அப்போது நன்ருய் அமைக்கப்பட்ட ஹோல்டர் பாட் என்னும் ஆதாரங்களை உபயோகிக்கவேண்டும். ஆனல், என்ஜினீர் தகுதியாயும் திறமையாயும் இருக்கிறதென்று எண்ணுகிற மாதிரியாய் அந்தக் குழாய்களை சுவர்களுடன் உறுதியாக அவர் அணைத்தால் அதுவே எப்போதும் போதுமானதாகும்.

*ஆதாரங்கள்.*

45. அவர் - அப்படிப்பட்ட மலக்குழாய் கட்டிடத்தின் உட்புறத்திலிருந்தாலுஞ்சரி வெளிப்புறத்திலிருந்தாலுஞ்சரி, அது யாதொரு மழைத் தண்ணீர்க்குழாயோடாகிலும், யாதொரு ஸ்நானம் செய்யும் இடத்திலுள்ள அழுக்குத் தண்ணீரோடாகிலும், மூத்திரம் அல்லது மலஜலசம்பந்தமான வேறே அசுத்தங்கள் சேருவதற்காக ஏற்படுத்தப்பட்டதல்லாத வேறே யாதொரு குழியோடாகிலும் சம்பந்தப்படாதிருக்கும்படி கட்டவேண்டும்; மேலும், அவர்-அப்படிப்பட்ட மலக்குழாயிலாவது அதற்கும் அது சம்பந்தப்படுத்தப்பட்டிருக்கும் யாதொரு சாக்கடைக்காலுக்கும் இடையிலாவது எந்த ட்ராப்பும் இராமலிருக்கும்படி அந்த மலக்குழாயைக் கட்டவேண்டும்.

*சம்பந்தங்கள்.*

46. அவர் - அப்படிப்பட்ட மலக் குழாயானது கட்டிடத்துக்கு உள்புறத்திலிருந்தாலுஞ்சரி வெளிப்புறத்திலிருந்தாலுஞ்சரி அது வட்டவடிவுள்ளதாயும் 4 அங்குலத்துக்குக் குறையாமல் உட்புறத்தில் குறுக்களவு உள்ளதாயும் இருக்கும்படி செய்யவேண்டும்; மேலும், அப்படிப்பட்ட மலக்குழாயை அதன் குறுக்களவு குறையாதபடியும், (தவிர்க்ககூடாத சந்தர்ப்பங்களிலன்றி மற்றப்படி) ஷ மலக்குழாயில் யாதொரு வளைவாகிலும் கோணமாகிலும் ஏற்படாதபடியும், அந்த மலக் குழாயின் திறந்த முனையின் மூலமாய் அசுத்தமான காற்று அபாயமில்லாமல் வெளியேபோவது சாத்தியமாயிருக்கக்கூடிய உயரத்துக்கும் நிலைமையிலும் மேலே கொண்டுபோகும்படி செய்யவேண்டும். திறந்த முனையின் நிலைமையானது 26-வது சகாயச்சட்டத்தின் (a), (b), (c) குறிப்பிட்ட பகுதிகளில் குறித்த திட்டங்களை அனுசரித்ததாயிருக்கவேண்டும்.

*குறுக்களவு.*

*வெளியேபோகும் வழி.*

## VIII.—மலக்குழாய், வேஸ்ட்பைப் என்னும் (மலம் நீக்கிய) அழுக்குநீர்க்குழாய், காற்றுவருவாய்க்கான குழாய் சம்பந்தங்கள் முதலியவை

எந்த நபரால் அல்லது எந்த நபருக்காக புதிய அல்லது ஏற்கனவே இருக்கிற கட்டிடங்களுக்காக சாக்கடைக்கால்களாவது சுகாதார சம்பந்தமான இசைப்புகளாவது இதர கட்டுவேலைகளாவது ஏற்படுத்தப்படுகின்றனவோ, கட்டப்படுகின்றனவோ, அமைக்கப்படுகின்றனவோ அல்லது மாற்றப்படுகின்றனவோ, அப்படிப்பட்ட ஒவ்வொரு நபரும் கீழே கண்டிருக்கிற விதமாய் நடந்துகொள்ளவேண்டும்.

47. ஒவ்வொரு விஷயத்திலும் அவர் - ஈயக்குழாய்களை நன்ருய்த் துடைக்கப்பட்ட ஏம்மர் ஜாயின்டுகளால் ஜாயின்ட் செய்விக்கவேண்டும்; மேலும், அவர் - தண்டவாளக் குழாய்களை, ஸாக்கெட்டானது முழுவதும் நிரப்பப்பட்டு பிகிந்த பிறகு ஈயத்தின் ஆழம் $1\frac{3}{4}$ அங்குலத்துக்குக் குறையாமலிருக்கும்படி உருக்கிய ஈயத்தினல் நன்ருய சந்தில்லாமல் பிகிந்து ஜாய்ன்ட் செய்விக்கவேண்டும்.

*ஈயக்குழாய்களுக்கும் இரும்பு குழாய்களுக்குமான ஜாயின்டுகள்.*

ஆனல், அவர்-என்ஜினீர் தகுதியானதென்றும் திறமையானதென்றும் எண்ணுகிற மாதிரியாய்க் குழாய்களை சம்பந்தப்படுத்தினல் அதுவே எப்போதும் போதுமானதாகும்.

குழாய்களும் ஜாயின்டுகளும் காற்று உள்ளே புகாதபடி இருக்கவேண்டுமென்பது.

48. அவர் - சகல மலக்குழாய்களும் அழுக்குநீர்க்குழாய்களும் காற்றுவருவாய்க்கான குழாய்களும் இதரமான சகல குழாய்களும் தரைக்கு மேலே இருக்கும்போது என்ஜினீர் அல்லது நகா விசாரணைச் சங்கத்தின் வேறே அதிகாரம்பெற்ற ஆபிஸர் முன்னிலையில் ஷை என்ஜினீர் அல்லது அதிகாரம்பெற்ற வேறே ஆபிஸர் கட்டளையிடுகிறபடி புகையை உண்டாக்கி பிரயோகித்து அவைகளுக்குள் காற்று புக முடியாதென்று ருஜுப்படுத்திவைக்கவேண்டும்.

ஈயக்குழாயை தண்டவாளக்குழாயோடு சம்பந்தப்படுத்துவது.

49. அவர் ஈயத்தினால் செய்யப்பட்ட யாதொரு மலக்குழாய், அழுக்குநீர்க்குழாய், காற்றுவருவாய்க்கான குழாய் அல்லது ட்ராப்பை தண்டவாளக்குழாய் அல்லது சாக்கடைக்காலோடு சம்பந்தப்படுத்தும் ஒவ்வொரு விஷயத்திலும், அவர் - அப்படிப்பட்ட ஈயக்குழாய் அல்லது ட்ராப்புக்கும் அப்படிப்பட்ட இரும்புகுழாய் அல்லது சாக்கடைக்காலுக்கும் மத்தியில் பித்தளை, செம்பு அல்லது வேறே தகுந்த வஸ்துவினால் செய்த விளிம்புள்ள (திம்பில்) விரல்மூடிபோன்ற உபகரணமொன்றை அமைக்கவேண்டும்; மேலும், அவர் - அப்படிப்பட்ட ஈயக்குழாய் அல்லது ட்ராப்பை ஷை விரல்மூடிபோன்ற உபகரணத்துடன் பற்றவைத்து துடைத்த ஜாய்ன்டினால் சம்பந்தப்படுத்தவேண்டும்; அல்லாமலும், அவர்- அந்த விரல்மூடிபோன்ற உபகரணத்தை அந்த தண்டவாளக் குழாய் அல்லது சாக்கடைக்காலுடன் நன்றாய்ச் சந்தில்லாமல் உருக்கிய ஈயத்தினால் பிகியப்பட்டதான ஜாயின்டினால் சம்பந்தப்படுத்தவேண்டும்.

ஆனால், அவர் தகுதியானதென்றும் திறமையானதென்றும் என்ஜினீர் எண்ணுகிற மாதிரியாய் ஈயக்குழாய் அல்லது ட்ராப்பைத் தண்டவாளக்குழாய் அல்லது சாக்கடைக்காலோடு சம்பந்தப்படுத்தினால், அதுவே எப்போதும் போதுமானதாகும்.

கல்லினால் செய்த ட்ராப்பை ஈயக் குழாயோடு சம்பந்தப்படுத்துவது.

50. அவர் கல்லினால் செய்த அல்லது எறக்குறைய கண்ணாடிபோலாக்கப்பட்ட வஸ்துவினால் செய்த யாதொரு ட்ராப் அல்லது குழாயை ஈயத்தினால் செய்த யாதொரு மலக் குழாய், அழுக்குநீர்க் குழாய் அல்லது ட்ராப்போடு சம்பந்தப்படுத்துகிற ஒவ்வொரு விஷயத்திலும், அவர் - அப்படிப்பட்ட கல்லினால் செய்த அல்லது எறக்குறைய கண்ணாடிபோலாக்கப்பட்ட வஸ்துவினால் செய்த ட்ராப் அல்லது குழாய்க்கும் அப்படிப்பட்ட ஈயக்குழாய் அல்லது ட்ராப்புக்கும் மத்தியில் பித்தளை, செம்பு அல்லது வேறே தகுந்த வஸ்துவினால் செய்த ஸாக்கெட் ஒன்றை அமைத்து, ஷை கல்லினால் செய்த அல்லது எறக்குறைய கண்ணாடிபோலாக்கப்பட்ட வஸ்துவினால் செய்த ட்ராப் அல்லது குழாயை ஷை ஸாக்கெட்டில் சொருகி போர்ட்லாண்ட் ஸிமெண்ட் மார்ட்டரினால் ஜாய்ன்ட் செய்வித்து, அந்த ஸாக்கெட்டை ஈயக்குழாய் அல்லது ட்ராப்போடு பற்றவைத்து துடைத்த ஜாயின்டினால் சம்பநதப்படுத்தவும்வேண்டும்.

ஆனால், அவர் கல்லினால் செய்த அல்லது எறக்குறைய கண்ணாடிபோலாக்கப்பட்ட வஸ்துவினால் செய்த ட்ராப் அல்லது குழாயை ஈயத்தினால் செய்த ட்ராப் அல்லது குழாயோடு என்ஜினீர் தகுதியானதென்றும் திறமையானதென்றும் எண்ணுகிற மாதிரியாய் சம்பந்தப்படுததினால், அதுவே எப்போதும் போதுமானதாகும்.

ஈயக்குழாயை கல்லினால் செய்த சாக்கடைக்காலோடு சம்பந்தப்படுத்துவது.

51. அவர் ஈயத்தினால் செய்த மலக்குழாய், அழுக்குநீர்க்குழாய், காற்றுவருவாய்க்கான குழாய் அல்லது ட்ராப்பை கல்லினால் செய்த அல்லது எறக்குறைய கண்ணாடிபோலாக்கப்பட்ட வஸ்துவினால் செய்த குழாய் அல்லது சாக்கடைக்காலோடு சம்பந்தப்படுத்தும் ஒவ்வொரு விஷயத்திலும், அவர் - அப்படிப்பட்ட ஈயத்தினால் செய்த மலக்குழாய், அழுக்குநீர்க்குழாய், காற்றுவருவாய்க்கான குழாய் அல்லது ட்ராப்புக்குத் அப்படிப்பட்ட கல்லினால் செய்த அல்லது எறக்குறைய கண்ணாடிபோலாக்கப்பட்ட வஸ்துவினால் செய்த குழாய் அல்லது சாக்கடைக்காலுக்கும் மத்தியில் பித்தளை, செம்பு அல்லது வேறே தகுந்த உலோகக்கலப்பினால் செய்த விளிம்புள்ள விரல்மூடிபோன்ற உபகரணமொன்றை அமைக்கவேண்டும்; மேலும், ஷை ஈயக்குழாய் அல்லது ட்ராப்பை அந்த விரல்மூடிபோன்ற உபகரணத்தோடு பற்றவைத்து துடைத்த ஜாய்ன்டினால் சம்பந்தப்படுத்தி, அந்த விரல்மூடிபோன்ற உபகரணத்தின் விளிம்புள்ள ஓரத்தை மேலே சொல்லப்பட்ட கல்லினால் செய்த அல்லது எறக்குறைய கண்ணாடிபோலாக்கப்பட்ட வஸ்துவினால்செய்த குழாய் அல்லது சாக்கடைக்காலின்மேல் உள்ள ஸாக்கெட்டுக்குள் சொருகி போர்ட்லாண்ட் ஸிமெண்ட் மார்ட்டரினால் அதை ஜாயின்ட் செய்விக்கவேண்டும்.

ஆனால், அவர் ஈயத்தினால் செய்த குழாய் அல்லது ட்ராப்பை கல்லினால் செய்த அல்லது எறக்குறைய கண்ணாடிபோலாக்கப்பட்ட வஸ்துவினால் செய்த குழாயோடு என்ஜினீர் தகுதியானதென்றும் திறமையானதென்றும் எண்ணுகிற மாதிரியாய் சம்பந்தப்படுத்தினால், அதுவே எப்போதும் போதுமானதாகும்.

52. அவர் தண்டவாளத்தினுல் செய்த மலக்குழாய், அழுக்குநீர்க்குழாய், காற்று வருவாய்க்கான குழாய் அல்லது ட்ராப்பைக் கல்லினுல் செய்த அல்லது ஏறக்குறைய கண்ணுடிபோலாக்கப்பட்ட வஸ்துவினுல் செய்த குழாயோடு சம்பந்தப்படுத்தும் ஒவ்வொரு விஷயத்திலும், அவர் - அப்படிப்பட்ட தண்டவாளக்குழாய் அல்லது ட்ராப்பின் ஸ்பிகாட் முனையை ஷை கல்லினுல் செய்த அல்லது ஏறக்குறைய கண்ணுடிபோலாக்கப்பட்ட வஸ்துவினுல் செய்த குழாயின்மேலுள்ள ஸாக்கெட்டுக்குள் சொருகி, போர்ட்லாண்ட் ஸிமெண்ட் மார்ட்டரினுல் ஜாய்ன்ட் செய்விக்க வேண்டும்.

தண்டவாளக்குழாயைக் கல்லினுல் செய்த சாக்கடைக்காலோடு சம்பந்தப்படுத்துவது.

ஆனுல், அவர் தண்டவாளக்குழாய் அல்லது ட்ராப்பைக் கல்லினுல் செய்த அல்லது ஏறக்குறைய கண்ணுடிபோலாக்கப்பட்ட வஸ்துவினுல் செய்த குழாயோடு என்ஜினீர் தகுதியானதென்றும் திறமையானதென்றும் எண்ணுகிற மாதிரியாய் சம்பந்தப்படுத்தினுல், அதுவே எப்போதும் போதுமானதாகும்.

53. அவர் கல்லினுல் செய்த அல்லது ஏறக்குறைய கண்ணுடிபோலாக்கப்பட்ட வஸ்துவினுல் செய்த ட்ராப் அல்லது குழாயைத் தண்டவாளத்தினுல் செய்த மலக்குழாய், அழுக்குநீர்க்குழாய், ட்ராப் அல்லது சாக்கடைக்காலோடு சம்பந்தப்படுத்தும் ஒவ்வொரு விஷயத்திலும், அவர் - ஷை கல்லினுல் செய்த அல்லது ஏறக்குறைய கண்ணுடிபோலாக்கப்பட்ட வஸ்துவினுல் செய்த ட்ராப் அல்லது குழாயை அப்படிப்பட்ட தண்டவாளத்தினுல் செய்த மலக்குழாய், அழுக்குநீர்க் குழாய், ட்ராப் அல்லது சாக்கடைக்காலின்மேலுள்ள ஸாக்கெட்டுக்குள் சொருகி போர்ட்லாண்ட் ஸிமெண்ட் மார்ட்டரினுல் ஜாய்ன்ட் செய்விக்கவேண்டும்.

கல்லினுல் செய்த ட்ராப்பைத் தண்டவாளத்தினுல் செய்த மலக்குழாயோடு சம்பந்தப்படுத்துவது.

இந்த காரியத்துக்காக அவர் - இரும்பு குழாய்க்கு அதைச் சுற்றிலும் ஸிமெண்டுக்காக உள்ள வட்டவடிவமான இடம் $\frac{5}{16}$ அங்குலத்துக்குக் குறையாமலிருக்கும்படி பிரதியேகமான ஒரு பெருத்த ஸாக்கெட்டை ஏற்படுத்தவேண்டும்.

ஆனுல், அவர் கல்லினுல் செய்த குழாய் அல்லது ட்ராப்பைத் தண்டவாளக் குழாயோடு என்ஜினீர் தகுதியானதென்றும் திறமையானதென்றும் எண்ணுகிற மாதிரியாய் சம்பந்தப்படுத்தினுல், அதுவே எப்போதும் போதுமானதாகும்.

## IX.—வாட்டர் க்ளாஸெட் என்னும் கக்கூஸிலுள்ள ட்ராப்புகளுக்கு காற்றுவருவாய் ஏற்படுத்துவது.

எந்த நபரால் அல்லது எந்த நபருக்காக புதிய அல்லது ஏற்கனவே இருக்கிற கட்டிடங்களுக்காக சாக்கடைக்கால்களாவது சுகாதாரசம்பந்தமான இசைப்புகளாவது இதர கட்டு வேலைகளாவது ஏற்படுத்தப்படுகின்றனவோ, கட்டப்படுகின்றனவோ, அமைக்கப்படுகின்றனவோ அல்லது மாற்றப்படுகின்றனவோ அப்படிப்பட்ட ஒவ்வொரு நபரும் கீழே கண்டிருக்கிற விதமாய் நடந்துகொள்ளவேண்டும் :

54. அவர் யாதொரு வாட்டர் க்ளாஸெட் என்னும் கக்கூஸை அதன் மலக்குழாயானது வேறே யாதொரு வாட்டர் க்ளாஸெட் என்னும் கக்கூஸோடு சம்பந்தப்பட்டிருக்கும்படி கட்டும் ஒவ்வொரு விஷயத்திலும், அவர் - அப்படிப்பட்ட ஒவ்வொரு வாட்டர் க்ளாஸெட் என்னும் கக்கூஸைச் சேர்ந்த ட்ராப்பிலிருந்தும் மலக்குழாயின் உச்சியவ்வளவு உயரமான ஒரு இடத்தில் வெளிக்காற்று உள்ளேபோகும்படியாவது, ஷை மலக்குழாயோடு சம்பந்தப்பட்டு மிகவும் உயரத்திலிருக்கிற வாட்டர் க்ளாஸெட் என்னும் கக்கூஸுக்குமேலுள்ள ஒரு இடத்தில் மலக்குழாய்க்குள் காற்றுபோகும்படியாவது செய்யவேண்டும்; மேலும், இப்படி செய்யும்போது காற்றுவருவாய்க்கான குழாயானது எல்லா பாகங்களிலும் இரண்டு அங்குலத்துக்குக் குறையாமல் உட்புறத்தில் குறுக்களவு உள்ளதாயிருக்க வேண்டியதுமல்லாமல், மலக் குழாயின் கிளையோடாகிலும், ட்ராப்போடாகிலும் அந்த ட்ராப்பின் மிகவும் உயர்ந்த பாகத்திலிருந்து மூன்று அங்குலத்துக் குறையாததும் 12 அங்குலத்துக்கு மேற்படாததுமான தூரத்திலுள்ள ஒரு இடத்திலும் தண்ணீர்த் தடையின் எந்தப் பக்கம் மலக்குழாய்க்கு மிகவும் சமீபத்திலிருக்கிறதோ அந்தப் பக்கத்திலும் சம்பந்தப்படுத்தப்படவும்வேண்டும். அவர் - காற்றுவருவாய்க்கான குழாயையும், மலக்குழாயின் கிளை அல்லது ட்ராப்பையும் சேர்க்கும் ஜாயின்டானது தண்ணீர் ஓடும் திசையில் இருக்கும்படி செய்யவேண்டும்.

திறந்தவெளியில் காற்று போகும்படி செய்யவேண்டுமென்பது.

55. அவர் - மேலே சொல்லப்பட்ட காற்றுவருவாய்க்கான குழாயை, 32-வது சகாயச்சட்டத்தில் அழுக்குநீர்க் குழாய்களுக்காக குறிப்பிட்டிருக்கிறபடி உருக்கிவார்த்த ஈயத்தினுல் அல்லது பளுவான தண்டவாளத்தினுல் செய்து, 34-வது சகாயச்சட்டத்தில் விவரித்திருக்கிற மாதிரியாய் அதற்கு ஆதாரம் ஏற்படுத்தவேண்டும்.

வஸ்துக்களும் ஆதாரங்களும்.

அப்படிப்பட்ட காற்றுவருவாய்க்கான குழாயை ஒரு கட்டிடத்துக்குள்ளே கட்டுவது அவசியமாயிருக்கும் யாதொரு விஷயத்தில், அவர் - அப்படிப்பட்ட காற்று வருவாய்க்கான குழாயை உருக்கிவார்த்த ஈயத்தினுல் கட்டவேண்டும்.

## X.—கக்கூஸுகள், சாம்பல்குழிகள் முதலானவைகளுக்கு சாக்கடைக்கால்கள் அமைப்பது.

சாக்கடைக்கால்கள் அமைப்பது.

56. எந்த நபரால் அல்லது எந்த நபருக்காக சாக்கடைக்கால்கள் கட்டப்படுகின்றனவோ அப்படிப்பட்ட ஒவ்வொரு நபரும்-யாதொரு கக்கூஸ், அர்த் க்ளாஸெட் என்னும் மண்ணினுல் சுத்தம் செய்யப்படும் கக்கூஸ், சாம்பல் குழி அல்லது அசுத்தத்துக்கான ஏனமானது நேரிலாகிலும் மற்றப்படியாகிலும் சாக்கடைக்கால்களோடு சம்பந்தப்படும்படி விடக்கூடாது. அவர் அப்படிப்பட்ட யாதொரு இடத்தின் தரையிலிருந்து கழுவித் தள்ளும் அசுத்தங்களை, சரியாய் ட்ராப் அமைத்து மூடியுள்ள சாக்கடைக்கால் வழியாக அழுக்குநீர் சாக்கடைக்கால் ட்ராப்பின் அழுக்கு ஜலதாரைப் பக்கத்தில் அழுக்கு ஜலதாரையோடு சம்பந்தம் ஏற்படுத்தியிருக்கும் இடத்தில் போய்ச் சேரும்படிச் செய்யவேண்டும். அவர் - யாதொரு முற்றத்துக்கு செங்கல், கல், கான்க்ரீட் அல்லது என்ஜினீர் அங்கீகரித்துள்ள வேறே யாதொரு வஸ்துவினுல் தளவரிசை செய்திருந்தாலன்றி மற்றப்படி அந்த மூற்றம் அல்லது திறந்தலையான வேறே இடத்தை யாதொரு பொதுச் சாக்கடைக்காலில் போய்ச்சேரும் அல்லது அதனுடன் சம்பந்தப்பட்டிருக்கும் எந்த சாக்கடைக்காலோடும் சம்பந்தப்படுத்தும்படி செய்யக்கூடாது.

## XI.—திறந்தலையான சாக்கடைக்கால்கள்.

எந்த நபரால் அல்லது எந்த நபருக்காக மியுனிஸிபல் சாக்கடைக்கால் ஏற்பாட்டுடன் சம்பந்தப்படும் சாக்கடைக்கால்கள் அல்லது இதர கட்டுவேலைகள் கட்டப்படுகின்றனவோ, அமைக்கப்படுகின்றனவோ அல்லது மாற்றப்படுகின்றனவோ அப்படிப்பட்ட ஒவ்வொரு நபரும் கீழே கண்டிருக்கிற விதமாய் நடந்துகொள்ளவேண்டும் :

அசுத்தங்களைக் கொண்டுபோவதற்காக வீடுகளில் திறந்தலையான சாக்கடைக்கால் கூடாதென்பது. மலம், மூத்திரம் முதலியவைகளைக்கொண்டு போவதற்கு திறந்தலையான சாக்கடைக்கால் கூடாதென்பது.

57. அசுத்தங்களையும் மழைத்தண்ணீரையும் கொண்டுபோவதற்காக ஒன்றுயுள்ள திறந்தலையான சாக்கடைக்கால்கள் ஏற்கனவே ஏற்படுத்தப் பெற்றிருக்கும் வீடுகளின் விஷயத்திலன்றி மற்றப்படி, அவர் - அசுத்தங்களைக் கொண்டுபோவதற்காக யாதொரு திறந்தலையான சாக்கடைக்காலை ஒரு கட்டிடத்தின் உட்புறத்தில் கட்டவாவது கட்டுவிக்கவாவது கூடாது; அல்லாமலும், அவர் - கெட்டியாகவோ திரவரூபமாகவோவுள்ள மல முதலியவைகளைக் கொண்டுபோவதற்காக எந்த இடத்திலாகிலும் யாதொரு திறந்தலையான சாக்கடைக்காலைக் கட்டவாவது கட்டுவிக்கவாவது கூடாது.

திறந்தலையான சாக்கடைக்காலை மூடியுள்ள சாக்கடைக்காலோடு சம்பந்தப்படுத்தும்போதெல்லாம், அவர் - சம்பந்தம் ஏற்படுத்தும் இடத்துக்கு அடுத்து மேலேயுள்ள திறந்தலையான சாக்கடைக்காலின் முனையில் ட்ராப் ஒன்றைக் கட்டவேண்டும்.

அமைப்பு.

அவர் - திறந்தலையான சகல சாக்கடைக்கால்கள் அல்லது மேற்புறத்து வாய்க்கால்களையும் பாதி வட்டவடிவுள்ள கண்ணுடிபோலாக்கப்பட்ட கல் சாமான்களினுல் கட்டுவிக்கவேண்டும்; அந்தப்படி கட்டுவிக்கும்போது இன்வர்ட்டுகளென்னும் அடிவட்டபாகங்களுக்கு ஸாக்கெட் சானெல்கள் என்னும் கூடுபோல் ஒன்றுக்குள் ஒன்றுயுள்ள வாய்க்கால்களை, வாய்க்காலின் உச்சியிலிருந்து அதன் அடிபாகத்துக்குக் கீழே குறைந்தது மூன்றங்குல ஆழத்துக்கும் அந்த வாய்க்காலின் இரண்டு பக்கங்களிலும் குறைந்தது மூன்றங்குல அகலத்துக்கும் பரவியிருக்கும் நல்ல போர்ட்லாண்ட் ஸிமென்ட் கான்க்ரீட் பரப்பின்மேல் அமைக்கவேண்டும்; அந்த வாய்க்காலின் மேல் சாக்கடைக்காலை போர்ட்லாண்ட் ஸிமென்ட் மார்ட்டர் என்னும் சுண்ணச்சாந்தைக் கொண்டு செங்கல் கட்டிடமாகக் கட்டலாம்; அதன்மேல் குறைந்தது $\frac{1}{2}$ அங்குலத்துக்கு ஸிமென்ட் மார்ட்டர் பூசவேண்டும். அவர் 4 அங்குல ஆழத்துக்கும் 4 அங்குல அகலத்துக்கும் குறைந்துள்ள சாக்கடைக்கால் எதுவும் கட்டக்கூடாது. அவர் - பக்கத்துத் தரையின் மேற்பரப்பின்மேல் குறைந்தது 4 அங்குல உயரத்துக்காகிலும், மழைத்தண்ணீர் அல்லது மேற்புறத்தில் வழிந்து ஓடும் தண்ணீர் எதுவும் சாக்கடைக்கால்களில் விழுவதை நன்றுகத் தடுக்கக்கூடியதாய் 4 அங்குல உயரத்துக்கு மேற்பட்ட உயரத்துக்காகிலும் அப்படிப்பட்ட சகல சாக்கடைக்கால்கள் அல்லது வாய்க்கால்களுக்கும் தடைச்சுவர்கள் ஏற்படுத்தவேணடும்.

ஆனுல், அவர் தகுதியானதென்றும் திறமையானதென்றும் என்ஜினீரால் எண்ணப்படுகிற விதமாய் அப்படிப்பட்ட சாமான்களைக்கொண்டு ஷை சாக்கடைக்கால்கள் அல்லது வாய்க்கால்களைக் கட்டினுல், அதுவே எப்போதும் போதுமானதாகும்.

கிராதிகள் அமைப்பது.

58. அவர் - திறந்தலையான சாக்கடைக்காலுக்கும் மூடப்பட்டுள்ள சாக்கடைக்காலுக்கும் சம்பந்தம் ஏற்படுத்தும் ஒவ்வொரு இடத்திலும், (கக்கூஸ் சாக்கடைக்காலானது தனிரேகையிலிருந்து, தெருச் சாக்கடைக்

காலோடு போய்ச்சேரும் வீட்டுச் சாக்கடைக்காலின் தொடர்ச்சியாயிராதபோது அப்படிப்பட்ட) கக்கூஸ் சாக்கடைக்கால் தவிர வேறே ஒவ்வொரு சாக்கடைக்காலிலும் ஜலம் வந்து விழும் ஒவ்வொரு இடத்திலும் தண்டவாளத்தினாலாவது வேறே தகுந்த வஸ்துவினாலாவது செய்து என்ஜினீரால் அங்கீகரிக்கபபடும் மாதிரியாயுள்ள (க்ரேட்டிங்) கிராதி ஒன்றை அமைக்கும்படிச் செய்யவேணடும்.

ஸில்ட் காட்சர் என்னும் சேற்றைத் தடுக்கும் உபகரணமும் ட்ராப்பும்.

*59. அவர் - வீட்டுச் சாக்கடைக்காலிலிருந்து தண்ணீர் வெளியே விழும் இடத்தில் என்ஜினீரால் அங்கீகரிக்கப்பட்ட மாதிரியான "மதராஸ்" மாதிரியைச் சேர்ந்த நல்ல ட்ராப் ஒன்றையும் சேற்றைத் தடுக்கும உபகரணமொன்றையும் ஏற்படுத்தவேண்டும்; மேலும், அப்படிப்பட்ட ட்ராப்பும் உபகரணமும் கூட என்ஜினீரால் அங்கீகரிக்கப்பட்ட விதமாகவும் நிலைமையிலும் அமைக்கப்படவேண்டும்.

### XII.—வீட்டுச் சாக்கடைக்கால் ஏற்பாட்டை நல்ல ஸ்திதியில் வைத்துவருவது.

சாக்கடைக்கால் சம்பந்தமான கட்டுவேலையையும் உபகரணங்களையும் சரியான ஸ்திதியில் வைத்துவரவேண்டுமென்பது.

60. யாதொரு வளவின் சொந்தக்காரர் - அந்த வளவின் சாக்கடைக்கால் ஏற்பாட்டுடன் சம்பந்தப்பட்டிருக்கும் சகல குழாய்கள், சாக்கடைக்கால்கள், ட்ராப்புகள், முதலிய, கட்டுவேலைகள், சாதனங்கள் உபகரணங்கள் ஆகிய இவைகளை சரியான ஸ்திதியில் எப்போதும் வைத்துவரவேண்டும்; மேலும், நகர விசாரணைச்சங்கத்தைச்சேர்ந்த கிரமமாய் அதிகாரம் கொடுக்கப்பெற்ற யாதொரு உத்தியோகஸ்தர் அவைகளைப் பார்வையிடுவதற்கு வேண்டிய சௌகரியங்களையெல்லாம் ஷை சொந்தக்காரர் செய்துகொடுக்க வேண்டும்.

### XIII.—நோடிஸ்-களும் ப்ளான்களைக் கொடுத்துவைப்பதும்.

கட்டுவேலைகளை ஏற்படுத்தும் உத்தேசத்தைக்குறித்து நோடிஸ் கொடுப்பது.

61. எந்த நபராவது எவையேனும் சாக்கடைக்கால்கள், சுகாதாரசம்பந்தமான இசைப்புகள் அல்லது சாக்கடைக்கால்கள் சம்பந்தமான இதர கட்டுவேலைகளை அமைக்கவோ கட்டவோ அல்லது மாற்றவோ உத்தேசித்தாலும் அப்படி செய்யவேண்டியவராயிருந்தாலும், அப்படிப்பட்ட ஒவ்வொரு நபரும் - அப்படிப்பட்ட யாதொரு கட்டுவேலையை ஆரம்பிப்பதற்குமுன் அப்படி செய்ய உத்தேசித்திருப்பதைக்குறித்து கம்மிஷனருக்கு எழுத்துமூலமாய் முப்பது நாளைய நோடிஸ் கொடுக்கவேண்டும்; அந்த நோடிஸை (A ஷெட்யூலில் கண்ட) நமூனாப்படி இரட்டைப்பிரதியாய்த் தயார்செய்து மியுனிஸிபல் ஆபிஸில் ஒப்பிக்கவேண்டும்; சங்கதி எழுதுவதற்கு அவசியமான இடங்கள் காலியாய் விட்டு அச்சிட்டிருக்கிற அந்த நமூனாப் பிரதிகளை, பிரதி ஒன்றுக்கு மூன்று தம்பிடி வீதம் பணம் செலுத்தி மியுனிஸிபல் ஆபிஸில் விண்ணப்பம் செய்துகொள்வதன் மேல பெற்றுக்கொள்ளலாம்.

அந்த நோடிஸில் அவர் - தம்முடைய முழுப்பெயரையும் விலாசத்தையும் எழுதி, எந்த வளவில் மேற்சொல்லிய கட்டுவேலைகளைக் கட்டிமுடிப்பதாக உத்தேசித்திருக்கிறதோ அந்த வளவு இருக்கிற டிவிழனையும் தெருவையும் அதன் வரி (அஸ்ஸெஸ்மென்ட்) நம்பரையும், அச்சிட்ட நோடிஸ் நமூனாவில் வேண்டியிருக்கிற எல்லா விவரங்களையும் கண்டெழுதவேண்டும்.

ப்ளான்களையும் ஸெக்ஷன்களையும் கொடுத்துவைப்பது.

62. எந்த நபராவது எவையேனும் சாக்கடைக்கால்கள், சுகாதாரசம்பந்தமான இசைப்புகள் அல்லது சாக்கடைக்கால் சம்பந்தமான இதர கட்டுவேலைகளை அமைக்கவோ கட்டவோ அல்லது மாற்றவோ உத்தேசித்தாலும் அப்படி செய்யவேண்டியவராயிருந்தாலும், அப்படிப்பட்ட ஒவ்வொரு நபரும்-அப்படிப்பட்ட நோடிஸ-டன்கூட, ப்ளான்களையும் (நக்ஷாக்களையும்) ஸெக்ஷன்களையும் இரட்டைப்பிரதியாகக் கொடுத்துவைக்கவேண்டும்; அந்த ப்ளான்களும ஸெக்ஷன்களும் ட்ரேஸிங் லினன் என்னும் துணியின்மேல் தெளிவாயும் அழிபடக்கூடாத விதமாயும் எழுதப்பட்டு, ஒவ்வொரு 16 அடிக்கும் ஒரு அங்குலத்துக்குக் குறையாத ஸ்கேல் என்னும் அளவுப்படி வரையப்பட்டிருக்கவேண்டும்; மேலும், அந்த ஸெக்ஷன்களின (ஹாரிஜான்டல்) தரைமட்டத்துக்குச் சரியான ஸ்கேலானது ஷை ப்ளான்களின் ஸ்கேலைப்போலவே இருக்கவேண்டும்; அல்லாமலும், அவைகளில் அவர் - கட்ட உத்தேசித்திருக்கிற புதிய சாக்கடைக்கால்கள் முழுவதையும், எண்களில் அவற்றின் உத்தேசிக்கப்பட்ட பரிமாணங்களையும் க்ரேடியென்டுகளையும், தரை மேற்பரப்பு மட்டங்களையும், கட்ட உத்தேசித்திருக்கும் சாக்கடைக்கால்களின் ஆழங்களையும், பிரஸ்தாப வளவில் எந்த சாக்கடைக்கால்களுடனாயினும் சம்பந்தப்பட்ட அல்லது சம்பந்தப்படுத்த உத்தேசிக்கப்பட்ட கட்டிடம், கல்லி, மலக்குழாய், அழுக்குநீர்க் குழாய், காற்று வருவாய்க்கான குழாய், வாட்டர் க்ளாஸெட் என்னும் கக்கூஸ், ஸ்நானம் செய்யு

---

* தெருச் சாக்கடைக்காலுடன் வீட்டுச் சாக்கடைக்காலை சம்பந்தப்படுத்துவதற்காகப் பிடிக்கும் செலவில் எவ்வளவு பாகத்தை சொந்தக்காரர் செலுத்தவேண்டுமென்னும் விஷயத்தைக்குறித்த முடிவாய் செய்யப்படும் தீர்மானத்தை அனுசரித்து 59-வதுசகாயச்சட்டத்தை மாற்றவேண்டியதாயிருக்கும்.

மிடம், முகமுதலியவை கழுவிக்கொள்ளுமிடம், மூத்திரம் பெய்யுமிடம், கக்கூஸ், குழி, ட்ராப் அல்லது வேறே உபகரணம் ஒவ்வொன்றும் இருக்கும் ஸ்தானத்தையும், எல்லா மேற்பரப்புச் சாக்கடைக்கால்களின் ஸ்தானங்களையும் அவைகள் செல்லும் மார்க்கங்களையும்,பிரஸ்தாப வளவுக்கு அடுத்திருக்கும் தெருக்களின் பெயர்களையும், ப்ளான் வரையப்பட்டிருக்கும் ஸ்கேலையும் காட்டவேண்டும்; அன்றியும் கட்ட உத்தேசிக்கப்படும் புதிய சாக்கடைக்கால்களையும் உபகரணங்களையும் சிவப்பு வர்ணத்திலும், இப்போதிருக்கும் கட்டிடங்களையும் சாக்கடைக்கால்களையும் உபகரணங்களையும் கறுப்பு வர்ணத்திலும் காட்டவேண்டும், அல்லது வெவ்வேறு வர்ணங்களால் மற்றப்படி ஒன்றிலிருந்தொன்றைப் பிரித்துக்காட்டவேண்டும்.

மேலும், அவர் - ஒரு அடிக்கு ஒரு அங்குலத்துக்குக்குறையாத ஸ்கேல்படி ட்ரேஸிங் லினன்மேல் இங்கியினால் தயார்செய்து, தரைமட்டத்தையும் மழைத்தண்ணீர், சேறு ஆகிய இவைகளை விலக்குவதற்காக ஏற்கனவே ஏற்பட்டுள்ள அல்லது ஏற்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ள தடைச்சுவர்கள் அல்லது இதர சாதனங்களையும் காட்டியிருக்கும் சகல திறந்தலையான சாக்கடைக்கால்களின் குறுக்கு ஸெக்ஷன்களையும் (அவைகளின் பரிமாணங்களையும் இலக்கங்களில் கண்டெழுதி) கொடுத்துவைக்கவேண்டும்.

ப்ளான்களை அங்கீகரிப்பது அல்லது அங்கீகரிக்காமலிருப்பது.

63. அடுத்து முந்திய சகாயச்சட்டத்தில் சொல்லியிருக்கிறபடி நோடிஸும் ப்ளான்களும் ஸெக்ஷன்களும் கொடுத்துவைக்கப்பட்ட பிறகு முப்பது தினங்களுக்குள் கம்மிஷனரானவர்-அந்த ப்ளான்களும் ஸெக்ஷன்களும் அங்கீகரிக்கப்பட்டனவா இல்லையா என்பதை ஷெ நோடிஸ் கொடுத்த நபருக்கு எழுத்துமூலமாய்த் தெரிவிக்க வேண்டும் ; மேலும், அவர் - அவசியமென்றாவது உசிதமென்றாவது தோற்றுகிற எவையேனும் மாறுதல்கள் அல்லது சீர்திருத்தங்களைச் செய்யும்படி அந்த நபருக்குக் கட்டளையிடலாம் ; அப்பிரகாரமே அந்த நபர் அந்த ப்ளான்களையும் ஸெக்ஷன்களையும் மாற்ற வேண்டும்.

ப்ளான்களும் ஸெக்ஷன்களும் அங்கீகரிக்கப்பட்ட பிறகு, என்ஜீனீரால் கையொப்பமிடப்பட்ட அவைகளின் ஒரு பிரதியை அந்த நபருக்குத் திருப்பிக்கொடுத்து, ஒரு பிரதியைக் கம்மிஷனர் தம்மிடம் நிறுத்திக்கொள்ளவேண்டும். கமமிஷனரால அங்கீகரிக்கப்பட்ட ப்ளான்களுக்கும் ஸெக்ஷன்களுக்கும் ஒரு பிரதியை வேலை நடக்குமிடத்தில் வேலை நடந்துவரும் எல்லா சமயங்களிலும் வைத்துவைக்கவேண்டும் ; மேலும், கம்மிஷனராவது அவரால் அதுவிஷயமாய் அதிகாரம் கொடுக்கப்பெற்ற யாதொரு உத்தியோகஸ்தராவது பார்வையிடுவதற்காக அந்த ப்ளான்களும் ஸெக்ஷன்களும் எல்லா சமயங்களிலும் கிடைக்கக்கூடியவைகளாயிருக்கவேண்டும்.

வேலையை ஆரம்பிப்பது.

64. பிறகு அப்படிப்பட்ட நபர் - ஒரு பெரிய ரஸ்தாவுக்குள்ளேயிருக்கும் அந்த வேலையின் பாகங்களும், நகர் விசாரணைச்சங்கத்தாரிடத்தில் சங்கிரமித்திருக்கிற யாதொரு சாக்கடைக்காலோடு கடைசியாய்ச் சம்பந்தப்படுத்துவதற்காக கம்மிஷனரால் நிறுத்திவைத்துக்கொள்ளப்படக்கூடிய அதன் இதர பாகங்களும் நீங்கலாக அந்த வேலையின் மற்ற பாகங்களைச் செய்துகொண்டுபோகலாம் ; ஆனால், ஷெ ப்ளான்கள் அங்கீகரிக்கப்பட்டதைக் குறித்த நோடிஸின் தேதி முதல் மூன்று மாதத்துக்குள் அந்த வேலை ஆரம்பிக்கப்படாவிட்டால், அப்படி அங்கீகரித்தது ரத்துசெய்யப்பட்டதாக எண்ணப்படும்.

வேலையைச் சட்டவிரோதமாய் ஆரம்பிப்பது.

65. கம்மிஷனரின் சம்மதியை எழுத்துமூலமாய் முதலில் பெற்றுக்கொள்ளாமல், ப்ளான்களும் ஸெக்ஷன்களும் அங்கீகரிக்கப்படுவதற்குமுன் அப்படிப்பட்ட யாதொரு வேலையை ஆரம்பிக்கிற ஒவ்வொரு நபரும் 73-வது சகாயச்சட்டத்தில் குறிப்பிட்டிருக்கிறபடி அபராதம் விதிக்கப்படுவதற்குள்ளாவார்.

லைஸென்ஸ் பெற்றிருக்கும் கன்ட்ராக்டர்கள்.

66. நகர் விசாரணைச்சங்கத்தைச் சேர்ந்த கிரமமாய் அதிகாரம் கொடுக்கப்பெற்ற உத்தியோகஸ்தர்கள் தவிர ஒவ்வொரு கன்ட்ராக்டர் அல்லது வேறே நபரும்-தனி நபர்களைச்சேர்ந்த சாக்கடைக்கால்களையும் சாக்கடைக்கால் சம்பந்தமான உபகரணங்களையும் கட்டுவது, அமைப்பது, மாற்றுவது சம்பந்தமான எவையேனும் வேலைகளைச் செய்வதற்குமுன் கம்மிஷனர் கையெழுத்து போட்ட லைஸென்ஸ் ஒன்றைப் பெறவேண்டும் ; அப்படிப்பட்ட லைஸென்ஸில் அது இன்ன கால அளவுக்குச் செலாவணியாய்க்கொண்டிருக்குமென்பதைக் குறித்திருக்கவேண்டியதுமல்லாமல், இன்ன வகையைச்சேர்ந்த வேலை செய்ய லைஸென்ஸ்தாரருக்கு அனுமதி கொடுக்கப்பட்டிருக்கிறதென்று கண்டிருக்கவும் வேண்டும் ; மேலும், கம்மிஷனருடைய இஷ்டத்தையே பொறுத்து ஷெ லைஸென்ஸானது எந்தக் காலத்திலாகிலும் ரத்துசெய்யப்படத்தக்கதாகும். யாதொரு லைஸென்ஸ் கொடுக்கப்படுவதற்குமுன் பத்து ரூபாய் கட்டணம் செலுத்தவேண்டும். யாருடையபெயரானது வேலை நடக்கும் ஒரு காலத்தில் நகர் விசாரணைச்சங்கத்தார் வைத்திருக்கும் அங்கீகாரமான ப்ளம்மர்களின் ஜாபிதாவில் சேர்க்கப்பட்டிருக்கிறதோ அப்படிப்பட்ட நபராலன்றி வேறே எவராலும் ப்ளம்மர் வேலை ஒன்றும் செய்யப்படக்கூடாது. (இதனுடன் சேர்க்கப்பட்டிருக்கும் B ஷெட்யூலைப் பார்க்கவும்.)

கட்டுவேலைகளின் பாகங்களை மூடிவிடுவதைக் குறித்த நோடிஸ்.

67. எந்த சாக்கடைக்கால்களையாவது சாக்கடைக்கால் சம்பந்தமான இதர கட்டுவேலைகளையாவது கட்டுகிற அல்லது மாற்றுகிற ஒவ்வொரு நபரும் - சாக்கடைக்கால் ஏற்பாட்டுடன் சம்பந்தப்பட்ட எவையேனும் அஸ்திவாரங்கள், சாக்கடைக்கால்கள் அல்லது உபகரணங்களின் எந்த பாகத்தையாவது மூடிவிடப்போகுமுன், அப்படிப்பட்ட அஸ்திவாரங்கள், சாக்கடைக்கால்கள் அல்லது உபகரணங்கள் பார்வையிடுவதற்கு சித்தமாயிருக்கின்றனவென்று என்ஜினீருக்கு எழுத்துமூலமாய் நோடிஸ் கொடுத்து, இன்ன தேதியில் இத்தனை மணிக்கு அந்த அஸ்திவாரங்கள், சாக்கடைக்கால்கள் அல்லது உபகரணங்களைத் தாம் மூடிவிடப்போவதாக அந்த நோடிஸில் குறிப்பிடவேண்டும்; அந்த நோடிஸானது ஒரு நமூனாவின்படி எழுதப்பட்டிருக்கவேண்டும்; சங்கதி எழுதுவதற்கு அவசியமான இடங்கள் காலியாய் விட்டு அச்சிட்டிருக்கிற அந்த நமூனாவின் பிரதிகளை மியுனிஸிபல் ஆபிஸில் விண்ணப்பம் செய்துகொள்வதன்மேல் இலவசமாய்ப் பெற்றுக்கொள்ளலாம்; மேலும், அந்த நபர் - அந்த நோடிஸை அதில் குறிப்பிட்டிருக்கிற தேதிக்குப் பரிஷ்காரமாய்க் குறைந்தது ஏழு நாள் முன்னதாக மியுனிஸிபல் ஆபிஸில் ஒப்பிக்கும்படி செய்யவேண்டும்.

பூர்த்திசெய்ததைக் குறித்து நோடிஸ்.

68. எந்த சாக்கடைக்கால்களையாவது சாக்கடைக்கால் சம்பந்தமான வேறே கட்டுவேலைகளையாவது கட்டுகிற அல்லது மாற்றுகிற ஒவ்வொரு நபரும் - இன்ன தேதியில் இத்தனை மணிக்கு அந்த சாக்கடைக்கால்கள் அல்லது கட்டுவேலைகள் கடைசியாகப் பார்வையிடப்படுவதற்கும், வேண்டியிருந்தால் ஏற்கனவேயுள்ள யாதொரு சாக்கடைக்காலுடன் சம்பந்தப்படுத்தப்படுவதற்கும் சித்தமாயிருக்குமென்று குறிப்பிட்டு என்ஜினீருக்கு எழுத்துமூலமாய் நோடிஸ் கொடுக்கவேண்டும்; அந்த நோடிஸானது ஒரு நமூனாப்படி எழுதப்படவேண்டும்; சங்கதி எழுதுவதற்கு அவசியமான இடங்கள் காலியாய் விட்டு அச்சிட்டிருக்கிற இந்த நமூனாவின் பிரதிகளை மியுனிஸிபல் ஆபிஸில் ஒரு அணா செலுத்தி விண்ணப்பம் செய்துகொள்வதன்மேல் பெற்றுக்கொள்ளலாம்; மேலும், அந்த நபர் அந்த நோடிஸை, அதில் மேற்கண்டபடி குறிப்பிட்டிருக்கிற தேதிக்குப் பரிஷ்காரமாய்க் குறைந்தது ஏழு நாள் முன்னதாக மியுனிஸிபல் ஆபிஸில் ஒப்பிக்கும்படி செய்யவேண்டும்.

அங்கீகரிப்பதில்லையென்று மறுக்கப்படுவதன்மேல் அப்பீல் செய்துகொள்வது.

69. (1) 63-வது சகாயச்சட்டத்தின்படி ப்ளான்களையும் ஸெக்ஷன்களையும் அங்கீகரிப்பதில்லையென்று கம்மிஷனர் மறுக்கும்போதெல்லாம், அப்படி மறுப்பதற்குண்டான காரணங்களை அவர் குறிப்பிட்டுச் சொல்லவேண்டும்; அப்படி மறுக்கப்பட்டதைப்பற்றி அந்த விண்ணப்பதாரர் நிலையான கம்மிட்டியாருக்கு அப்பீல் செய்துகொள்ளலாம். நிலையான கம்மிட்டியார் செய்யும் தீர்மானம் முடிவானதாகும். அப்படிப்பட்ட யாதொரு அப்பீலை நிலையான கம்மிட்டியார் தள்ளிவிடும்பட்சத்தில், அவர்கள்- அப்படி தள்ளிவிடுவதற்குண்டான காரணங்களை எழுத்துமூலமான உத்தரவைக்கொண்டு குறிப்பிட்டுச் சொல்லவேண்டும்.

(2) 63-வது சகாயச்சட்டத்தில் நிர்ணயிக்கப்பட்டிருக்கிற காலஅளவுக்குள் கம்மிஷனரானவர் ப்ளான்களையும் ஸெக்ஷன்களையும் குறித்து தம்முடைய அங்கீகாரத்தைக் கொடுக்காமலும் மறுக்காமலும் இருக்கும்பட்சத்தில், விண்ணப்பதாரர் எழுதிக்கேட்டுக் கொள்வதன்மேல், நிலையான கம்மிட்டியார் - அப்படிப்பட்ட அங்கீகாரம் கொடுக்கப்படவேண்டுமா வேண்டாமா என்பதை அந்தக் காலஅளவு கழிந்தவுடனே எழுத்துமூலமான உத்தரவைக்கொண்டு நிர்ணயிக்க கடமைப்பட்டவராவார்கள்.

(3) அப்படி எழுத்துமூலமாய்ச் செய்துகொள்ளப்பட்ட வேண்டுகோளைப் பெற்றுக்கொண்டதிலிருந்து பதினைந்து தினத்துக்குள் நிலையான கம்மிட்டியார், அப்படிப்பட்ட அங்கீகாரம் கொடுக்கப்படவேண்டுமா வேண்டாமா என்பதை நிர்ணயிக்காவிட்டால், அந்த அங்கீகாரம் கொடுக்கப்பட்டிருப்பதாக எண்ணப்படும்; அதன்மேல் விண்ணப்பதாரர் கட்டுவேலைகளைக் கட்டத் தொடங்கலாம்; ஆனால், அப்படி செய்கையில் 1919-ம் வருஷத்திய சென்னை ராஜதானிப்பட்டணத்து மியுனிஸிபல் ஆக்டின் நிபந்தனைகளில் எதையாவது, அதை அனுசரித்துச் செய்யப்பட்ட எந்த விதிகள் அல்லது சகாயச்சட்டங்களையாவது மீறி நடக்கக்கூடாது.

மியுனிஸிபல் சாக்கடைக்காலோடு சம்பந்தப்படுத்துவது.

70. யாதொரு சாக்கடைக்கால் முழுவதும் அதற்குச் சம்பந்தப்பட்ட உபகரணங்களும் நகர் விசாரணைச்சங்கத்தார் விதித்திருக்கிற சகல நிபந்தனைகளையும் அனுசரித்து இருக்கின்றனவென்று என்ஜினீர் ஸெர்டிபிகேட் (உறுதிச்சீட்டு) கொடுக்கிறவரையில், அந்த சாக்கடைக்காலை யாதொரு மியுனிஸிபல் சாக்கடைக்காலுடன் சம்பந்தப்படுத்தக்கூடாது. அந்தப்படி சம்பந்தப்படுத்தவேண்டுமென்று எழுத்துமூலமாய்ச் செய்துகொள்ளப்பட்ட விண்ணப்பத்தை ஷை ஸெர்டிபிகேட்டுக்கு ஒரு நகல் சகிதமாய்க் கம்மிஷ

னர் பெற்றுக்கொண்ட பிறகு நகர்விசாரணைச் சங்கத்தைச் சேர்ந்த கிரமமாய் அதிகாரம் கொடுக்கப்பெற்ற உத்தியோகஸ்தர்கள் மாத்திரமே அந்தப்படி யாதொரு விஷயத்தில் சம்பந்தப்படுத்தவேண்டும்.

பணம் கட்டிவைப்பது.

71. மியுனிஸிபல் சாக்கடைக்காலுடன் (யாதொரு சாக்கடைக்காலை) சம்பந்தப்படுத்தும்படி விண்ணப்பம் செய்துகொள்ளும் ஒவ்வொரு நபரும் - அந்தப்படி சம்பந்தப்படுத்துவதற்குப் பிடிக்கும் செலவுக்காக கம்மிஷனர் கேட்கும் பணத்தொகையை அப்படி சம்பந்தப்படுத்தத் தொடங்குவதற்குமுன் கட்டிவைக்கவேண்டும்.

பார்வையிடுவது.

72. யாரால் அல்லது யாருக்காக யாதொரு சாக்கடைக்கால் அல்லது அதற்குச் சம்பந்தப்பட்ட வேறே கட்டுவேலையானது ஏற்படுத்தப்படுகிறதோ, கட்டப்படுகிறதோ, அமைக்கப்படுகிறதோ அல்லது மாற்றப்படுகிறதோ அப்படிப்பட்ட ஒவ்வொரு நபரும் - அந்த சாக்கடைக்கால் அல்லது கட்டுவேலையைப் பார்வையிடுவதற்காக நகர் விசாரணைச்சங்கத்தைச் சேர்ந்த அதிகாரம் கொடுக்கப்பெற்ற எந்த உத்தியோகஸ்தரும் அதனருகில் தாராளமாய்ப் போவதற்கான சௌகரியங்களை நியாயமான எல்லா வேளைகளிலும் ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும்.

## XIV.—தண்டனைகள்.

தண்டனைகள்.

73. இந்த சகாயச்சட்டங்களில் எதையாவது மீறி நடக்கிற யாதொரு நபர்—

(a) ஐம்பது ரூபாய் வரையில் அபராத தண்டனையும், அப்படி மீறி நடந்து கொண்டேயிருந்தால் முதல் தடவை மீறினதற்காகக் குற்றவாளியென்று தீர்மானிக்கப்பட்ட பிறகு அந்தப்படி மீறிநடந்துகொண்டேயிருக்கும் ஒவ்வொரு தினத்துக்கும் பதினைந்து ரூபாய் வரையில் அபராத தண்டனையும், அல்லது

(b) மீறிநடப்பதை நிறுத்தவேண்டுமென்று கம்மிஷனரிடத்திலிருந்து நோடீஸ் வரப்பெற்றுக்கொண்ட பிறகு அந்தப்படி மீறிநடந்துகொண்டேயிருக்கும் ஒவ்வொரு தினத்துக்கும் பத்து ரூபாய் வரையில் அபராத தண்டனையும்

விதிக்கப்படத்தக்கவராவார்.

## XV.—கட்டுவேலையை இடித்துத் தள்ளிவிட அதிகாரம்.

கட்டுவேலையை அப்புறப்படுத்துவதற்கோ மாற்றுவதற்கோ அல்லது இடித்துத் தள்ளிவிடுவதற்கோ அதிகாரம்.

74. மேலேகண்ட சகாயச்சட்டங்களை மீறி யாதொரு கட்டுவேலையானது ஆரம்பிக்கப்பட்டாலும் செய்யப்பட்டாலும், எந்த நபரால் அல்லது எந்த நபருக்காக அந்தப்படி கட்டுவேலை ஆரம்பிக்கப்பட்டதோ அல்லது செய்யப்பட்டதோ அப்படிப்பட்ட நபருக்கு கம்மிஷனர் கையொப்பமிட்டு கிரமமாய்ச் சேர்ப்பிக்கப்படும் அல்லது அவரிடத்தில் கொடுக்கப்படும் ஒரு எழுதிய நோடிஸ்மூலமாய், அந்தக் கட்டுவேலையை ஏன் அப்புறப்படுத்தவாவது மாற்றவாவது இடித்துத் தள்ளிவிடவாவது கூடாதென்பதற்குப் போதுமான காரணத்தை, அந்த நோடிஸில் குறிப்பிடப்படும் தினத்திலாவது அதற்கு முன்னதாகவாவது ஒரு ஸ்டேட்மெண்ட் மூலமாய்க் காட்டும்படி உத்தரவு செய்யவேண்டும்; அந்த ஸ்டேட்மெண்ட் ஷை நபரின் கையெழுத்து சகிதமாகவாகிலும் அது விஷயமாய் அதிகாரம் கொடுக்கப்பெற்ற ஏஜெண்டின் கையெழுத்து சகிதமாகவாகிலும் எழுதப்பட்டு, கம்மிஷனருக்கு மேல்விலாசமிட்டு கிரமமாய்ச் சேர்ப்பிக்கப்படவேண்டும்; இல்லாவிட்டால், நோடிஸில் குறிப்பிட்டுள்ள தினத்தில் குறிப்பிட்டுள்ள நேரத்திலும் இடத்திலும் கம்மிஷனரின்முன் தாம் நேரில் ஹாஜராகியாவது இவ்விஷயமாய் அதிகாரம் கொடுக்கப்பெற்ற ஏஜெண்டை ஹாஜர்ப்படுத்தியாவது ஷை கட்டுவேலையை ஏன் அப்புறப்படுத்தவாவது மாற்றவாவது இடித்துத்தள்ளிவிடவாவது கூடாதென்பதற்குப் போதுமான காரணம் காட்டும்படி ஷை நபருக்கு உத்தரவு செய்யவேண்டும்.

அந்தநபர் ஷை நோடிஸில் குறிப்பிட்டுள்ள காலத்துக்குள் அப்படிப்பட்ட கட்டுவேலையை ஏன் அப்புறப்படுத்தவாவது மாற்றவாவது இடித்துத் தள்ளிவிடவாவது கூடாதென்பதற்குப் போதுமான காரணம் காட்டத் தவறினால் கம்மிஷனரானவர் - நிலையான கம்மிட்டியாரின் அங்கீகாரத்துடன் ஷை கட்டுவேலையை அப்புறப்படுத்தி அல்லது மாற்றி அல்லது இடித்துத்தள்ளி, அப்படி செய்ததற்காகப் பிடிக்கும் செலவை ஷை நபரிடம் வசூல்செய்யலாம்.

75. யாதொரு நபருக்காக நகர் விசாரணைச்சங்கத்தாரால் செய்யப்படும் சகல வேலைகளின் விஷயத்திலும், அந்தப்படி செய்வதற்காகப் பிடிக்கும் செலவானது ஷை நபர் செலுத்தத்தக்கதாயிருக்கும்பட்சத்திலே, அது - சம்பந்தப்பட்ட நபரின் திரவிய நிலைமையை அனுசரித்து கம்மிஷனருக்கு யுக்தமாகத் தோற்றுகிறபடி தவணைத் தொகைகளாக வசூலிக்கத்தக்கதாகும்.

A ஷெட்யூல்.

(இரட்டைப்பிரதியாய் அனுப்பப்படவேண்டும்.)

சாக்கடைக்கால் ரெஜிஸ்டர் நெ. ________ விண்ணப்பம் நெ. ________ பெற்றுக்கொள்ளப்பட்டது / அங்கீகரிக்கப்பட்டது.

## சென்னை நகர் விசாரணைச்சங்கம்.

1919-ம் வருஷத்திய சென்னை ராஜதானிப்பட்டணத்து மியுனிஸிபல் ஆக்ட்.

வளவுகளுக்குச் சாக்கடைக்கால் ஏற்பாடு.

சென்னை நகர் விசாரணைச்சங்கத்தின் கம்மிஷனர் அவர்களுக்கு.

ஐயா,

அடியில் கையொப்பமிட்டிருக்கும் நான் / நாங்கள் ________ டிவிஜனில் ________

________

* என்று சொல்லப்படும் வளவுக்கு இதனுடன் சேர்த்திருக்கும் விவரக்குறிப்புகளில் சொல்லியிருக்கிறபடியும் இதனுடன் (இரட்டைப்பிரதியாய் அனுப்பியிருக்கும்) ப்ளான்களிலும் ஸெக்ஷன்களிலும் காட்டியிருக்கிறபடியும் சாக்கடைக்கால் ஏற்படுத்த உத்தேசித்திருக்கிறேன் / றோம் என்று இதன்மூலமாய்த் தங்களுக்கு நோடிஸ் கொடுக்கிறேன் / றோம்; மேலும், மேற்கண்ட ஆக்டின் நிபந்தனைகளிலும் அதன்படி சென்னை நகர் விசாரணைச்சங்கத்தாரால் செய்யப்பட்ட சகாயச்சட்டங்களிலும், மியுனிஸிபல் சாக்கடைக்கால் ஏற்பாட்டுடன் எவ்வளவு சம்பந்தம் ஏற்படுத்தவேண்டுமென்று சொல்லியிருக்கிறதோ அவ்வளவு சம்பந்தத்தை ஏற்படுத்துவதற்கான செலவை நகர் விசாரணைச்சங்கத்தாருக்குச் செலுத்தவும், கட்டுவேலைகளின் மிகுதி பாகத்தை ஷை ஆக்டின் நிபந்தனைகளின்படியும ஷை சகாயச் சட்டங்களின்படியும் செய்யவும் உடன்படுகிறேன் / றோம்.

* வீட்டின் நம்பர் அல்லது பெயரையும், தெரு அல்லது ரஸ்தாவின் பெயரையும் எழுதவும்.

தேதி, 192 -ம் வருஷம் மீ உ.

வளவுக்கு சாக்கடைக்கால் ஏற்படுத்த உத்தேசக்கும் நபரின் கையொப்பம் } ________

மேல்விலாசம் ________

வீட்டுச் சொந்தக்காரரின் பெயர் ________

மேல்விலாசம் ________

† குறிப்பு.—யாதொரு புதிய வீடு அல்லது கட்டிடத்துக்கு அஸ்திவாரம் போட அல்லது அதற்காகத் தோண்ட ஆரம்பிப்பதற்கு முன்னும், அல்லது யாதொரு வீடு அல்லது கட்டிடத்தை மறுபடியும் கட்ட ஆரம்பிப்பதற்கு முன்னும், யாதொரு சாக்கடைக்காலை நேராகவாவது மற்றப்படியாவது யாதொரு மியுனிஸிபல் சாக்கடைக்காலில் விழும்படி செய்யும் காரியத்துக்காக அதை அமைப்பது அல்லது புதுப்பிப்பதற்கு முன்னும், மியுனிஸிபல் ஆபிஸிலிருந்து கிடைக்கும் நமூனுக்களில் கம்மிஷனருக்கு நோடிஸ் கொடுக்கவேண்டுமென்று நகர் விசாரணைச்சங்கத்தாரின் சகாயச்சட்டங்களில் விதிக்கப்பட்டிருக்கிறது. நகர் விசாரணைச்சங்கத்தாரால் ஏற்படுத்தப்பட்ட சகாயச்சட்டங்களின் பிரகாரம் அமைக்க உத்தேசித்திருக்கும் சாக்கடைக்காலின் நிலைமை, ஆழம், சாய்வு, பரிமாணம் ஆகிய இவைகளையும் அதோடு செய்யப்படும் சகல சம்பந்தங்களையும் காட்டும் ப்ளான்களையும் ஸெக்ஷன்களையும் இரட்டைப்பிரதிகளாக அப்படிப்பட்ட நோடிஸுடன்கூட அனுப்பவேண்டும்.

† இது கட்டிட சம்பந்தமான புதிய சகாயச்சட்டங்களைச் சேர்ந்ததாக இருக்கவேண்டும்.

### கட்டுவேலையைப்பற்றிய நுட்பமான விவரங்களும் சாமான்களின் விவரக்குறிப்பும்.

(இதை விண்ணப்பதாரர் அல்லது ப்ளான்களைக் கொடுத்துவைக்கும் நபர் எழுதவேண்டும்.)

குறிப்பு.—புதிய அல்லது மாற்றப்பட்ட கட்டுவேலையைப்பற்றி மாத்திரமே கீழேகண்ட விவரங்களில் எழுதவேண்டும் :—

| | |
|---|---|
| 1. மழைத் தண்ணீரையும் அசுத்தமான தண்ணீரையும் பிரிப்பது ... ... 3-ம் நெ. சகாயச்சட்டம் முதலியவைகளைப் பார்க்கவும். | |

2. மழைத் தண்ணீர் சாக்கடைக்கால்களும் தடைச்சுவர்களும் தண்ணீர் வெளியே போய்விழும் இடமும் ...

4-ம் நெ., 7-ம் நெ. சகாயச்சட்டங்கள் முதலியவைகளைப் பார்க்கவும்.

3. மழைத் தண்ணீர் ஜலதாரைகள், குழாய்கள் அல்லது நீர்பாயும் துவாரக்குழல்களிலிருந்து தண்ணீர் வெளியே விழும் இடங்கள் ... ...

5-ம் நெ. சகாயச்சட்டம் முதலியவைகளைப் பார்க்கவும்.

4. திறந்தலையான அசுத்த ஜல சாக்கடைக்கால்களும், அவைகளின் சாமான்களும், பரிமாணங்களும், தடைச்சுவர்களும், சேற்றையும் மழைத் தண்ணீரையும் விலக்குவதற்காக அமைக்கப்பட்ட இதர சாதனங்களும். அப்படிப்பட்ட சாக்கடைக்கால்களில் தண்ணீர் வந்து விழும்படியாக ஏற்படுத்தப்பட்டிருக்கும் (சாமான் முதலியவை) கழுவும் இடங்கள், தாழ்வாரங்கள், கக்கூஸ்கள், இசைப்புகள் ஆகிய இவைகளின் சங்கியை ... ...

3-ம் நெ., 57-ம் நெ. சகாயச்சட்டங்கள் முதலியவைகளைப் பார்க்கவும்.

5. வில்ட் காட்சர், க்ரேட்டிங் என்னும் கிராதி - இவைகளின் பரிமாணமும் ஸ்தானமும் ... ... ...

58-ம் நெ., 59-ம் நெ. சகாயச்சட்டங்களைப் பார்க்கவும்.

6. சாக்கடைக்கால்—
(a) பிரதான அழுக்கு ஜல சாக்கடைக்கால்—பரிமாணம் ... ...
—வாட்டம் ... ...
(b) கிளை சாக்கடைக்கால்கள்—
பரிமாணம் ... ...
வாட்டம் ... ...
(c) சாமான்கள்
(d) ஜாய்னட்செய்யும் விதம் ...

7-ம் நெ. முதல 14-ம நெ. வரையிலுள்ள சகாயச்சட்டங்களையும் 17-ம் நெ. சகாயச்சட்டம் முதலியவைகளையும் பார்க்கவும்.

7. குழாய்களைப் பதியவைப்பது—
(a) பதியவைக்கும் விதம் ... ...
(b) கான்க்ரீட் பரப்புகளின் கனமும் அகலமும்.
(c) கான்க்ரீட்டினால் செய்த உருட்சியான குழாய்களின் கனம்.

16-ம் நெ. சகாயச்சட்டம் முதலியவைகளைப் பார்க்கவும்.

| | |
|---|---|
| 8. சுவரின்கீழ் ஏற்படுத்தியிருக்கும் சாக்கடைக்காலைப் பாதுகாப்பது ...<br>25-ம் ஸூ. சகாயச்சட்டம் முதலியவைகளைப் பார்க்கவும். | |
| 9. ட்ராப்புகள், அவைகளின் விவரம்—<br>இன்டர்ஸெப்டர் என்னும் ட்ராப் ...<br>முகமுதலியவை கழுவிக்கொள்ளுமிடத்தின் அழுக்குநீர்க்குழாய்கள் ...<br>ஸ்நானம் செய்யுமிடத்தின் அழுக்குநீர்க்குழாய்கள் ... ...<br>(ஸிங்க்) குழி ... ... ...<br>கல்லி ட்ராப்புகள் ... ...<br>வாட்டர் க்ளாஸெட் என்னும் கக்கூஸின ட்ராப்புகள் ... ...<br>கொழுப்பு ட்ராப்புகள் ... ...<br>ஸ்லாப் ஸிங்க் என்னும் குழி ...<br>மூத்திரம் பெய்யுமிடம் ... ...<br>மற்றவை ... ... ...<br>19, 20, 21, 32, 33, 41, 59-ம் ஸூ. சகாயச்சட்டங்கள் முதலியவைகளைப் பார்க்கவும். | |
| 10. மான்ஹோல் என்னும் துவாரங்களும் இன்ஸ்பெக்ஷன் சேம்பர் என்னும் பார்வையிடுவதற்கான பெட்டியைப் போன்ற கட்டிடங்களும் ...<br>சுவர்களின் கனம் ... ...<br>செங்கல்லின் விவரம் ... ...<br>பூசுவேலையின் ஷை ... ...<br>இன்வர்ட் சானல் என்னும் அடிவட்டக் கால்வாய்களின் விவரம் ... ... ...<br>சேம்பர்களின் ஆழம் ... ...<br>மூடியின் பரிமாணமும் விவரமும் பொருத்தும் விதமும் ... ...<br>11-ம் ஸூ., 22-ம் ஸூ. சகாயச்சட்டங்கள் முதலியவைகளைப் பார்க்கவும். | |
| 11. சாக்கடைக்கால்களுக்கு காற்றுவருவாய் ஏற்படுத்துவது —<br>(a) சுத்தமான காற்றை உள்ளே விடும் வழி—<br>ஸ்தானம் ... ...<br>அதிசமீபத்திலுள்ள தரைமட்டத்துக்குமேல் உயரம்.<br>(b) காற்று வெளியே போவதற்கான ஷாப்ட்—<br>ஸ்தானம்.<br>உச்சியிலுள்ள டெர்மினல் என்னும் முடிவுஸ்தானம்.<br>26-ம் ஸூ. முதல் 31-ம் ஸூ. வரையிலுள்ள சகாயச்சட்டங்களைப் பார்க்கவும். | |

12. மலக்குழாய், அழுக்குநீர்க்குழாய், காற்றுவருவாய்க்குழாய் சம்பந்தங்கள்—

(a) ஈயக்குழாய்களும் இரும்பு குழாய்களும். (47-ம் நெ. சகாயச்சட்டம் முதலியவை).

(b) ஈயக் குழாய் அல்லது ட்ராப்பைத் தண்டவாளக் குழாயுடன்.

49-ம் நெ. சகாயச்சட்டம் முதலியவைகளைப் பார்க்கவும்.

(c) கல்லினால் செய்த குழாய் அல்லது ட்ராப்பை ஈயக் குழாயுடன்.

50-ம் நெ. சகாயச்சட்டம் முதலியவைகளைப் பார்க்கவும்.

(d) ஈய மலக்குழாய் அல்லது ட்ராப்பைக் கல்லினால் செய்த குழாய் அல்லது ட்ராப்புடன்.

51-ம் நெ. சகாயச்சட்டம் முதலியவைகளைப் பார்க்கவும்.

(e) தண்டவாளக்குழாயைக் கல்லினால் செய்த சாக்கடைக்காலுடன்.

52-ம் நெ. சகாயச்சட்டம் முதலியவைகளைப் பார்க்கவும்.

(f) கல்லினால் செய்த ட்ராப்பை தண்டவாள மலக்குழாயுடன்.

53-ம் நெ. சகாயச்சட்டம் முதலியவைகளைப் பார்க்கவும்.

13. வாட்டர் க்ளாஸெட் என்னும் கக்கூஸின் ட்ராப்புக்கு காற்றுவருவாய் ஏற்படுத்துவது.

சாமான்களும் ஆதாரங்களும் ...

54-ம் நெ, 55-ம் நெ. சகாயச்சட்டங்கள் முதலியவைகளைப் பார்க்கவும்.

14. வாட்டர் க்ளாஸெட் என்னும் கக்கூஸுகள் (அறைகள்)—

(a) தரைமட்டத்தில் அல்லது அதற்குமேல் இருப்பவை—

எந்தப் பக்கத்திலிருந்து அதற்குப் போவது.

தளவரிசைச் சாமான்கள் ...

கதவின்பக்கமாய்த் தளத்தின் வாட்டம்.

35-ம் நெ., 36-ம் நெ. சகாயச்சட்டங்கள் முதலியவைகளைப் பார்க்கவும்.

திறக்கப்படும் ஜன்னலின் பரிமாணம்.

அதன் ஸ்தானம் ... ...

இடைவிடாமல் காற்றுவருவாய் இருப்பதற்கான சாதனம்.

அதன் ஸ்தானம் ... ...

37-ம் நெ. சகாயச்சட்டம் முதலியவைகளைப் பார்க்கவும்.

| | |
|---|---|
| 14. வாட்டர் க்ளாஸெட் என்னும் கக்கூஸ-கள் (அறைகள்)—தொடர்ச்சி.<br>(b) வாட்டர் க்ளாஸெட் என்னும் கக்கூஸின் உபகரணங்கள்—<br>சட்டி, பேஸின் என்னும் தொட்டி முதலியவைகளின் விவரம்.<br>ப்ளஷிங்க் ஸிஸ்டர்ன் என்னும் தண்ணீர்த் தொட்டி. } விதம் ... பரிமாணம்.<br>ப்ளஷ் பைப் என்னும் தண்ணீர் விழும் குழாய்.<br>சாமான் ... ...<br>உட்புறத்துக் குறுக்களவு ...<br>பேஸின் என்னும் தொட்டியோடு சேர்க்கை.<br>38-ம் ஷ. முதல் 42-ம் ஷ. வரையிலுள்ள சகாயச்சட்டங்களைப் பார்க்கவும். | |
| 15. இதர கட்டுவேலை—<br>மேலே கண்ட தலைப்புகளில் சேராததாய் கட்டப்போகும் சுகாதார சம்பந்தமான வேறே யாதொரு கட்டுவேலையின் விவரம். | |
| 16. தெருவின் மேற்பரப்புக்குக் கீழே அழுக்கு ஜலதாரையின் ஆழம். | |

**குழாய்கள் சம்பந்தமான ஷெட்யூல்.**

| — | சாமான்கள். | குறுக்களவு. | எடை. | ஜாய்ன்ட் செய்விக்கும் விதம். |
|---|---|---|---|---|
| தரைமட்டத்துக்குக் கீழே போகும் சாக்கடைக்கால்கள். | | | | |
| பிரதான அழுக்குஜல சாக்கடைக்கால்கள். | | | | |
| கிளை அழுக்குஜல சாக்கடைக்கால்கள் ... | | | | |
| மலக்குழாய்கள் ... ... ... | | | | |
| மலக்குழாய்களல்லாத வேறே காற்றுவருவாய்க் குழாய்கள். | | | | |
| அழுக்குநீர்க் குழாய்கள் ... ... | | | | |
| மழைத்தண்ணீர்க் குழாய்கள்... ... | | | | |
| ஆன்டி ஸைபன் பைப் என்னும் நல்ல காற்றை உட்கொள்ளும் குழாய்கள். | | | | |

(கையொப்பம்) ______________

192 -ம்ஸ்ரீ ஸ்ரீ உ.

## B ஷெட்யூல்.

ப்ளம்மர்களுக்கு அதிகாரம் கொடுப்பது.

ப்ளம்மர்களைப்பற்றியதாய்க் கமிஷனரால் அதிகாரவாயிலாக வெளிவிடப்படும் யாதொரு ஜாபிதாவில், இந்த காரியத்துக்கென்று ஏற்படுத்தப்பட்ட நமூனாவில் கமிஷனருக்கு விண்ணப்பம் செய்துகொண்டு—

(1) ப்ளம்மர்களின் நாஷனல் ரெஜிஸ்ட்ரேஷன் சம்பந்தமான திட்டங்களின்படி க்ரேட் ப்ரிட்டனிலுள்ள ப்ளம்மர்களின் வொர்ஷிப்புல் (Worshipful) கம்பெனியாரிடமிருந்தும், அல்லது ஸ்டாட்யூட் என்னும் சாஸனப்படி ஏற்படுத்தப்படக்கூடிய அல்லது பிர

தேச கவர்ன்மெண்டாரால் அங்கீகரிக்கப்படக்கூடிய வேறே சபையாரிடமிருந்தும் கவர்ன் மெண்டாரால் அனுமதி கொடுக்கப்படும் ஷரத்துகளின்மேலும் ரெஜிஸ்டரானதைப்பற்றிய ஸெர்டிபிகேட்டை ஹாஜர்ப்படுத்தும், அல்லது

(2) நகர் விசாரணைச்சங்கத்தாரின் ரெகுலேஷன்களை அனுசரித்து ப்ளம்மர் வேலை செய்ய தாங்கள் திறமையுடைவர்களென்று கம்மிஷனருக்கு திருப்திசெய்விக்கும்

சகல ப்ளம்மர்களின் பெயர்களும் மேல்விலாசங்களும் அடங்கியிருக்கவேண்டும்.

ஆனால் எப்போதும், கம்மிஷனரானவர்-தமக்கு யுக்தமாகத் தோற்றுகிறபடி யாதொரு விண்ணப்பதாரருக்கு ஸெர்டிபிகேட் கொடுக்காமல் மறுக்கலாம்; இந்த விஷயத்தில் அவர் அப்படி செய்ததற்கு யாதொரு காரணமும் காட்டவேண்டியதில்லை.

ஸெர்டிபிகேட்டுக்காக விண்ணப்பம் செய்துகொள்ளும் யாதொரு ப்ளம்மருக்கு, ஸெர்டிபிகேட் கொடுப்பதற்குமுன், சித்தாந்த சம்பந்தமாகவும் அனுபோக சம்பந்தமாகவும் நடத்தப்படும் பரிக்ஷையில் தேறும்படி உத்தரவுசெய்யலாம். மாஸ்டர் ப்ளம்மர்கள் (ப்ளம்மர் வேலையில் திறமைபெற்றவர்கள்) ப்ளம்மர்வேலை செய்வதற்கு ஸெர்டிபிகேட் பெற்ற ப்ளம்மர்களையே அமர்த்திக்கொள்ளவேண்டும்.

லைஸென்ஸ் பெற விண்ணப்பம் செய்துகொள்ளும் ஒவ்வொரு ப்ளம்மரும்-ப்ளம்மருக்குரிய அலுவல்களைச் சரியாயும் கிரமமாயும் நிறைவேற்றுவதற்கு ஜாமீனாகக் கம்மிஷனரிடத்தில் 200 ரூபாய் கட்டவேண்டும். அதன்மேல், அவர் ஒரு உடன்படிக்கையில் கையொப்பமிட்டு ஒவ்வொரு ஸர்க்கார் வருஷத்திலும் முதல் மாதத்துக்குள் 10 ரூபாய் கட்டணத்தைச் செலுத்தினபிறகு பிரதி வருஷமும் அவருக்கு லைஸென்ஸ் கொடுக்கப்படும்.

அதிகாரவாயிலாய் வெளிவிடப்பட்ட ஜாபிதாவில் பெயர் சேர்க்கப்பட்டுள்ள யாதொரு ப்ளம்மரின்பேரில் திருப்திகரமில்லாமல் வேலைசெய்ததாகவாவது நகர் விசாரணைச் சங்கத்தாரின் ரெகுலேஷன்களை மீறினதாகவாவது குற்றம் சொல்ல கம்மிஷனருக்குக் காரணம் எற்பட்டு, அந்த ப்ளம்மர் அப்படி ரெகுலேஷன்களை மீறிநடந்ததற்கு நியாயமான அல்லது போதுமான சமாதானம் அல்லது காரணத்தை கம்மிஷனருக்குத் தெரிவிக்கத் தவறுகிறபட்சத்திலே, அப்படி குற்றம்செய்த ப்ளம்மரின் பெயரை, அதிகாரவாயிலாய் வெளிவிடப்பட்ட ஜாபிதாவிலிருந்து சுருக்கவகையாய் அடித்துவிட கம்மிஷனருக்கு அதிகாரமுண்டு. அப்படிப்பட்ட சந்தர்ப்பத்தில், கம்மிஷனரானவர்-ஜாமீனாகக் கட்டப்பட்ட 200 ரூபாய் முழுவதையுமாவது அதில் எவ்வளவையாவது நிறுத்திக்கொள்ளலாம்.

எப். ஜெ. ரிச்சர்ட்ஸ்,
கவர்ன்மெண்ட் ஸெக்ரெடரி.

(A true translation)

C. N. SARAVANA MUDALIYAR,
*Tamil Translator to Government.*

MADRAS: PRINTED AND PUBLISHED BY THE SUPERINTENDENT, GOVERNMENT PRESS.